உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-148

விருப்ப சந்தா இதழ்

அக்டோபர்
16-31 2022



புண்ணியம் சேர்க்கும் துலாக் காவிரி ஸ்நானம்

www.aanmeegamalar.com
e-magazine

www.aanmeegamalar.com

## சிவ பக்தர்களுக்கு வாரி வழங்கும் கஜலட்சுமி

# தட்டான் பழமொழியின் பொருள்

நமது முன்னோர்கள் ஒவ்வொரு நிகழ்விற்கும் ஒவ்வொரு பழமொழியை கூறியிருப்பதை கேட்டிருப்போம், தற்போது அதுபோன்ற பழமொழிகள் நடைமுறையில் யாரும் கடைபிடிக்காவிட்டாலும், ஒரு சில பழமொழிகளின் அர்த்தம் மிக வீரியம் வாய்ந்தாக ஒருசில நேரங்களில் அவற்றை பயன்படுத்தும் வாய்ப்பும் அவசியம் ஏற்படுகிறது.

இதில் மிகவும் அற்புதமான ஒரு பழமொழிதான் "தட்டானுக்கு சட்டை போட்டால் குட்டைப் பையன் கட்டையால் அடிப்பான்..."

இந்த விடுகதையானது சாதாரணமாக வரும் உளறலோ சாதாரண வார்த்தையோ அல்ல, இது ஒரு தெய்வீக விடுகதை...

இதற்கு புராணத்தை வைத்தே விளக்கி விடலாம்.

தானம் கேட்கும் வறியவர்களுக்கு தட்டாமல் வழங்குபவர் தான் தட்டான்.

இந்த இடத்தில் தட்டான் மஹாபலிச் சக்கரவர்த்தியை குறிக்கும்.

தட்டானுக்கு சட்டை போடுவது என்றால்,

தானம் கொடுக்க நினைப்பவரின் எண்ணத்தை தடுப்பது, அதாவது அவரின் ஈகை உள்ளத்தை மறைப்பது என்று பொருள்.

மஹாபலிச் சக்கரவர்த்தி 99 அசுவமேத யாகம் செய்து விட்டு நூறாவது அசுவமேத யாகம் செய்யும் போது பெருமாள் வாமன அவதாரத்தில் வந்து அவரிடம் தானம் கேட்கிறார்...



(குட்டை பையன் வாமன அவதாரத்தை குறிக்கிறது. )

ஆனால் சுக்ராச்சாரியார் மஹாபலி தாரை வார்ப்பதைத் தடுக்க வண்டாக உருமாறி கமண்டலத்தின் வாயை நீர் வராதவாறு அடைத்துக் கொள்கிறார்...

அப்பொழுது நம் குட்டைப் பையன் வாமனர் என்ன செய்கிறார் தெரியுமா?

ஒரு குச்சியை (கட்டை) எடுத்து கமண்டலத்தின் குழாயை குத்திவிடுகிறார். இதனால் சுக்ராச்சாரியருக்கு ஒரு கண் ஊனமாகி விடுகிறது. இந்த நிகழ்விற்குப் பின் சுக்ராச்சாரியார் தன் தவறை உணர்ந்துவிடுகிறார்.

பெருமாளின் வாமன அவதாரத்திற்கு பின் வள்ளலான மஹா பலிச் சக்கரவர்த்தியின் புகழ் உலகறிய செய்கிறார் பெருமாள்.

இந்த நிகழ்விலிருந்துதான் "தட்டானுக்குச் சட்டை போட்டால் குட்டைப் பையன் கட்டையால் அடிப்பான்" என்ற பழமொழி உருவானதாக கூறப்படுகிறது.

# வள்ளியின் மீதான காதலால் வேங்கை மரமாகிய முருகன்



வேலூர் மாவட்டத்திலுள்ள வள்ளிமலை எனும் ஊரில், அருணகிரியாரால் பாடப்பெற்ற தலம் ஒன்று அமைந்துள்ளது. இத்தலம் வள்ளி வாழ்ந்த இடம் என்பதால் அவளது பெயரிலேயே இவ்வூர் அழைக்கப்படுகிறது.

தல வரலாறு:

முன்னொரு காலத்தில் ஒரு சமயம், திருமால் முனிவர் வேடத்தில் பூலோகத்தில் உள்ள வனத்தில் தவமிருந்தார். அப்போது மகாலட்சுமி மான் வடிவில் வந்து நின்றது. முனிவர் மானை பார்த்தார்.

இதனால் கருவுற்ற மான் வள்ளிக் கொடிகளின் மத்தியில் ஒரு பெண் குழந்தையை ஈன்றது. அவ்வழியே வந்த வேடுவ தலைவன் நம்பிராஜன் குழந்தையை எடுத்து "வள்ளி" என பெயரிட்டு வளர்த்தான்.

கன்னிப்பருவத்தில் அவள் தினைப்புனம் காக்கும் பணி செய்தாள். அங்கு வந்த முருகன் வள்ளியின் மீது ஆசைப்பட்டு திருமணம் செய்ய விரும்பினார். இதையறிந்த நம்பிராஜன் திருத்தணியில் முருகனுக்கு முறைப்படி வள்ளியை திருமணம் செய்து கொடுத்தார். நம்பிராஜனின் வேண்டுதலுக்கு இணங்க இங்குள்ள குன்றில் முருகன் எழுந்தருளினார்.

தலச் சிறப்பு :

முருகனை கணவனாக அடைய விரும்பிய வள்ளி இத்தலத்தில் திருமால் பாதத்தை வைத்து வழிபட்டாள். இதனால் இங்கு பக்தர்களுக்கு திருமாலின் பாதம் பொறித்த ஜடாரி சேவை செய்யப்படுகிறது.

மலைக்கோவிலில் சுப்பிரமணியர் குடவறை சன்னதியில் வள்ளி தெய்வானையுடன் காட்சி





தருகிறார். வள்ளி வேடர் குலத்தில் வளர்ந்ததால் அர்த்தஜாம பூஜையில் தேனும் தினை மாவும் நைவேத்யமாக படைக்கப்படுகிறது.

ஒரு முறை முருகன் வள்ளியுடன் பேசிக் கொண்டிருந்த போது அங்கு நம்பிராஜன் வந்து விட்டார். எனவே முருகன் வேங்கை மரமாக உருமாறி தன்னை மறைத்துக் கொண்டார். இந்த மரமே இத்தலத்தின் விருட்சமாக இருக்கிறது.

பொதுவாக விமானத்தின் கீழ்தான் சுவாமி காட்சி தருவார். ஆனால் இங்கு முருகன் சன்னதிக்கு மேலே கோபுரம் இருக்கிறது.

திருமணமாகாதவர்கள் வள்ளியுடன் கூடிய முருகனை பிரார்த்தனை செய்தால் விரைவில் திருமணம் நடக்கும் என்பது ஐதீகம். பக்தர்கள் இங்கு நேர்த்திக்கடனாக சுவாமிக்கு தேன் தினைமாவு படைத்து வஸ்திரம் அணிவித்து அபிஷேகம் செலுத்துகிறார்கள்.

வள்ளி வாழ்ந்த இடம் என்பதால் அவளது பெயரிலேயே இத்தலம் அழைக்கப்படுகிறது. அடிவாரம் மற்றும் மலைக்கோயிலில் குமரி வள்ளிக்கு சன்னதி இருக்கிறது.

இவள் கையில் பறவை விரட்ட பயன்படுத்தும் உண்டி வில், கவண் கல் வைத்திருக்கிறாள். முருகன், வள்ளியுடன் பேசிக்கொண்டிருந்த போது, அங்கு நம்பிராஜன் வந்து விட்டார்.

எனவே முருகன் வேங்கை மரமாக உருமாறி தன்னை மறைத்துக் கொண்டார். இந்த மரமே இத்தலத்தின் விருட்சமாக இருக்கிறது.

பெரும்பாலும் கோயில்களில் தேரோட்டம் ஒரு நாளில் முடிந்து விடும். ஆனால் இத்தலத்தில் தேர், நான்கு நாட்கள் ரதவீதி (மலைப்பாதை) சுற்றி நிலைக்கு வருகிறது.

வழியில் வேடுவ மக்கள் தங்கள் வீட்டுப் பெண்ணான வள்ளிக்கு சீதனமாக அரிசி, வெல்லம், தானியம், காய்கறி, தேங்காய், பழம், ஆடைகள் கொடுக்கின்றனர்.

விழாவின் கடைசி நாளன்று (மாசி பவுர்ணமி) வள்ளி கல்யாணம் நடக்கிறது. அப்போது வேடுவர் குலத்தினர் தேன், தினைமாவினை தங்கள் மருமகனான முருகனுக்கு படைக்கின்றனர்.

முருகன், தெய்வானை திருக்கல்யாணம்கந்த சஷ்டிக்கு மறுநாள் நடக்கிறது. ஆடிக் கிருத்திகையை ஒட்டி நான்கு நாட்கள் தெப்பத்திருவிழா நடக்கும். அப்போது சுவாமி, சரவணப்பொய்கைக்கு எழுந்தருளுகிறார்.




முருகனை கணவனாக அடைய விரும்பிய வள்ளி, இத்தலத்தில் #திருமால் பாதத்தை வைத்து வழிபட்டாள். இதனால் இங்கு பக்தர்களுக்கு திருமாலின் பாதம் பொறித்த ஜடாரி சேவை செய்யப்படுகிறது.

வேலூரில் இருந்து 25கி.மீ தூரத்தில் வள்ளி மலை இருக்கிறது.

# மும்மூர்த்திகளும், முப்பது முக்கோடி தேவர்களும், 68 ஆயிரம் ரிஷிகளும், முனிவர்களும் சித்தர்களும் நீராடும்

# துலாக் காவிரி ஸ்நானம்



ஐப்பசி மாதத்தை துலா மாதம் என்று போற்றுவார்கள். ஐப்பசி மாதத்தில் காவிரியில் நீராடுவது மகா புண்ணியம் என்பார்கள். ஐப்பசி எனப்படும் துலா மாதத்தில் காவிரியில் நீராடுவதை துலா ஸ்நானம் என்று விவரிக்கிறது காவேரி மஹாத்மிய புராணம்.

துலாக் காவிரி ஸ்நானம் செய்பவர்கள், காவிரி ஆற்றுக்கு பூஜை செய்து வழிபடுவதுடன், அருகில் அரசமரம் இருந்தால் அதற்கு நீர் வார்த்து, அதை வலம்வந்து வணங்குவது புண்ணிய பலன்களைத் தரும்.

இந்தப் பூவுலகில், அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள் உள்ளன எனச் சொல்கிறது காவேரி மஹாத்மிய புராணம். துலாமாதமான ஐப்பசியில் உலகிலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் காவிரியில் சங்கமமாகின்றன என்பது ஐதீகம்.

ஐப்பசி மாதத்தை துலா மாதம் என்று போற்றுவர். இந்த மாதத்தில் இரவு நேரமும் பகல் நேரமும் சமமாக இருப்பதால், இதற்கு 'துலா (தராசு) மாதம் என்று பெயர். 'ஐப்பசி முதல் தேதி அன்று காவிரியில் நீராடுவது புண்ணியம்' என்கின்றன ஞான நூல்கள்.

துலா மாதத்தில் இதர நதிகளும் புண்ய தீர்த்தங்களும் காவேரியில் சேர்ந்து விளங்கு கின்றன. இதனால் இந்த நேரத்தில் ஸ்நானம் செய்பவர்கள் பஞ்ச மகா பாவங்களிலிருந்தும் (கள், காமம், கொலை, களவு, பொய்) விடுபடுகின்றனர். அதில் ஸ்நானம் செய்தவர்கள் அஸ்வமேத யாகம் செய்த பலனையும் அடைகின்றனர்.

துலா மாதத்தில் காவேரிக் கரையில் பித்ருக்களை நினைவாக ச்ராத்தம், பிண்ட தானம், தர்ப்பணம் இவற்றைச் செய்ய வேண்டும், அப்படிச் செய்தால், கல்ப கோடி வர்ஷபர்யந்தம் பித்ருக்களை த்ருப்தி செய்த பலன் கிடைக்கப் பெறும்.

பிரம்மா முதலான அனைத்து தேவர்களும், சரஸ்வதி, கௌரி, லக்ஷ்மி, இந்ராணி முதலியவர்களும் அப்ஸரஸ் என்ற தேவதைகளும் துலா மாதத்தில் காவேரியில் மூழ்கி குளித்துச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக காவேரிக் கரைகளில் பிறந்து வளர்ந்த பசு பக்ஷி முதலானவையும் அதன் காற்றினால் பரிசுத்தங்களாக ஆகி,





மோட்சத்தை அடைகின்றன என்று புராணங்கள் கூறுகின்றன.

அறியாமலே இவ்வளவு பலன் கிடைக்கும்போது, பக்தியுடன் ஸ்நானம் செய்தவர்கள் அடையும் பலனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

மேலும் மஹான்களின் பெருமை, துளசியின் மகிமை, கங்கையின் ப்ரபாவம், துளசியைக் கொண்டு செய்யப்படும் அர்ச்சனையின் வைபவம், சாளக்ராமத்தின் ஆராதன மஹிமை, காவேரியின் பெருமை இவற்றை உபதேசிக்கக் கேட்பவர்கள் மஹாபாக்கியசாலிகள்.

பூர்வ ஜென்மதத்தில் புண்யம் செய்தவர்களே இந்த நாட்களில், காவேரியைக் காணும் பாக்கியத்தையும் அதில் ஸ்நாநம் செய்யும் பலனைப் பெற்றவராக இருப்பார்கள். சாதாரணமாக இது அனைவருக்கும் கிட்டாது.

நதிகளில் மஹாவிஷ்ணுவின் திருவடியிலிருந்து உண்டான கங்கை எப்படி உயர்ந்ததோ, புஷ்பங்களில் துளசி எவ்வாறு மேற்பட்டதோ, விரதங்களில் ஏகாதசி விரதம் எப்படி உயர்ந்ததாக உள்ளதோ, க்ருஹஸ்தர்கள் செய்ய வேண்டிய கர்மாக்களுள் பஞ்ச மஹாயஜ்ஞங்கள் எவ்வாறு உயர்ந்தவையோ, சுத்திகளுக்குள் மனசுத்தி எப்படி உயர்ந்ததோ, தேவதைகளுள் ஸ்ரீமந்நாராயணன் எவ்வாறு உயர்ந்தவராக விளங்குகிறாரோ,அக்ஷரங்களுக்குள் ஓங்காரம் எவ்வாறு உயர்ந்ததோ, வேதங்களுள் சாமவேதம் எப்படி உயர்ந்ததாகக் கருதப் பெறுகிறதோ, பதினோரு ருத்ரர்களுக்குள் சங்கரம் எப்படி உயர்ந்தவராக உள்ளாரோ, பெண்களில் அருந்ததி, மகாலட்சுமி எவ்வாறு மேம்பட்டவர்களோ, தானங்களுக்குள் அன்ன தானம் எப்படி உயர்ந்ததோ அதேபோல் நதிகளுக்குள் உயர்ந்தது காவேரி நதி என்று புராணங்கள் கூறுகின்றன.

ஐப்பசி 1 முதல் நாளன்று (18.10.2022) திருப்பராய்த்துறையிலும் ஐப்பசி கடைசி நாள் (16.11.2022) மயிலாடுதுறையிலும் நீராடுவது விசேஷமாகக் கருதப்படுகிறது.

துலா மாதமாகிய ஐப்பசியில் பிரம்ம முகூர்த்தத்தில் காவிரி நதியில் நீராடினால், மகா விஷ்ணுவின் அருள் கிட்டும். துலா மாதத்தில் சூரிய உதயத்திற்கு முன் காவிரியில் மும்மூர்த்திகளும், முப்பது முக்கோடி தேவர்களும், 68 ஆயிரம் ரிஷிகளும், முனிவர்களும் சித்தர்களும் நீராடுவதாக சாஸ்திரம் குறிப்பிடுகிறது.

துலா மாதத்தில் காவிரியில் நீராடுவது புனிதமானது என்று சாஸ்திரம் சொல்லும் அதே வேளையில் இயலாத நிலையில் 'கடைமுகம்' என்று சொல்லப்படும் ஐப்பசி 30ந் தேதி நீராடி பலன் பெறலாம். அன்றும் நீராட முடியாதவர்கள், 'முடவன் முழுக்கு' என்று சொல்லப்படும் கார்த்திகை முதல் தேதி நீராடினாலும் புனிதம் பெறலாம் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

'ஐப்பசி மாதத்தில் காவிரியில் நீராடுவது காசியில் ஓடும் கங்கை நதியில் நீராடுவதற்கு சமம்' என்று புராணங்கள் கூறுகின்றன. ஏனெனில் ஐப்பசி மாதமானது துலா மாதத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி முதலான பாரதத்தில் ஓடும் நதி தேவதைகள் அனைத்தும் காவிரியில் நீராடி, தங்களிடம் மானிடர்கள் கரைத்துச் சென்ற பாபக் கறைகளைப் போக்கிக் கொள்கின்றது என்று காவிரி மகாத்மியம் என்னும் நூல் கூறுகிறது.

மக்கள் தங்களுடைய பாவங்களை போக்க கங்கையில் நீராடி நீராடி கங்கைக்கே பாவம் அதிகமாக சேர்ந்து தோஷம் ஏற்பட தன் பாவங்கள் தீர என்ன செய்ய வேண்டும்? என்று விஷ்ணு பகவானிடம் கேட்டாள் கங்கை. அதற்கு ஸ்ரீமகாவிஷ்ணு, "நீ காவேரி நதியில் நீராடு. உன் பாவம் நீங்கும்" என்றார்.

அன்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம்
புண்யக்ஷேத்ரே விநச்யதி |
புண்ய க்ஷேத்ரே கிருதம் பாபம்
வாரனாச்யாம் விநச்யதி |
வாரனாச்யாம் க்ருதம் பாபம்
கும்பகோனே விநச்யதி |
கும்பகோனே க்ருதம் பாபம்
காவேரி ஸ்நானே விநச்யதி |

என்று காவேரி ஸ்நானத்தின் மகிமையை

வேதம் போற்றுகிறது.

அதன்படியே ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாத அமாவாசையன்று கங்காதேவி காவேரியில் நீராடி மக்கள் தன்னிடம் கரைத்த பாவங்களைப் போக்கிக் கொள்கிறாள் என்று புரான இதிகாசங் களில் போற்றப்படுகின்றது

துலா மாதத்தில் காவிரியில் ஒருமுறை நீராடு பவன் ஸ்ரீமன் நாராயணனாக மாறுகிறான். மற்ற விரதங்களில் ஏதாவது சிறு தவறு ஏற்பட் டாலும் அதற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும். ஆனால், காவிரி துலா ஸ்நானத்திற்கு அப்படி எதுவுமில்லை.

'மக்களுக்கு புத்தியும் முக்தியும் அளிக்கும் துலா மாதத்தில் காவிரியில் நீராடுபவர்கள்தன்னையும், தங்கள் குடும்பத்தினரையும், முன்னோர்களின் பாபங்களையும் போக்கிக் கொள்வதுடன் வள மான வாழ்வு காண்கிறார்கள்' என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

'துலா காவிரி நீராடல் அழகு, ஆயுள், ஆரோக் கியம், செல்வம், கல்வி, மாங்கல்ய பாக்கியம், குழந்தைப்பேறு, வலிமை ஆகியவற்றை தரும். எனவே, காவிரியை நினைத்தாலும், சிறப்பைக் கேட்டாலும், பாபங்கள் விலகும்' என்றார் பிரம்மா, நதி தேவதைகளிடம்.

ஐப்பசி மாதத்தில் காவிரியில் நீராடி நீர்க்கடன் செலுத்துவோரின் முன்னோர்கள் சொர்க்கத்தை அடைகிறார்கள். காவிரி தேவியை வணங்கி துதிப்பவர்கள் சொர்க்க லோகம் செல்லும் பாக் கியத்தைப் பெறுகிறார்கள்.

தன்னில் நீராடு பவர் களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வளமான வாழ்வு தருபவள் என்கிறது காவிரி புராணம்.

நதி தேவதைகளும், தேவர்களும், மானிடர் களும் துலா மாதத்தில் காவிரியில் நீராடி தங்களிடம் உள்ள பாபங்களைப் போக்கிக் கொண்டதும், அந்தக் கறைகள் அனைத்தையும் காவேரி போக்கிக்கொள்ள திருமங்கலக்குடி திருத்தலத்திலும், மாயூரத்தில் (மயிலாடுதுறை) உத்தர வாகினியாக (தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்வது) இருந்து காவிரி போக்கிக் கொள்கிறாள் என்பது ஐதீகம்.

ஸ்ரீரங்கம் திருத்தலத்தில் அருள்புரியும் ரங்க நாதருக்கு ஐப்பசியில் தங்கக்குடங்களில் ஸ்ரீரங்கத் தின் தென்பகுதியில் உள்ள அம்மா மண்டபம் காவிரி நதிக்கரைப் படித்துறையிலிருந்து புனிதத் தீர்த்தத்தை சேகரித்து யானை மீது எடுத்து வந்து அபிஷேகம் செய்வர். மற்ற மாதங்களில் ஸ்ரீரங்கத்தின் வடக்கில் உள்ள கொள்ளிடத்தில் இருந்து வெள்ளிக் குடங்களில் தீர்த்தம் கொண்டுவந்து அபிஷேகம் செய்வார்கள்.

## துலா காவேரி மஹாத்மியம்:

ஆதியில் உமாதேவிக்கு ஸ்ரீ பரமேச்வரன் சொன்ன காவேரி மகாத்மியத்தை, தேவவன்மன் என்ற அரசனுக்கு,சுமத் திரங்கி என்ற ரிஷி சொல்லத் தொடங்குகிறார். ஒரு சமயம்பார்வதி பரமேச்வரர்கள் ஒரு நந்தவனத்தில் தங்கியிருந்த போது அங்கு பறவைகள் வடிவில் வந்த நதி தேவதைகள், துலா மாதத்தில் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டு அவ்விருவரையும் தரி சிக்க வந்தன. அவர்கள் வேண்டிய வரங்கள் எல்லாவற்றையும் தந்த ஈச்வரன், மேலும் கூற லானார்:

"கங்கைக்கு நிகரான காவிரியில் நீராடினாலும், தரிசித்தாலும், அதனை பக்தியுடன் தொட்டாலும் அதன் கரையில் தானம், தர்ப்பணம் செய்தாலும் எல்லா பாவங்களும் விலகி, புண்ணியம் கிட்டும்.

இதன் கரைகளில் காசிக்கு சமமான ஸ்தலங் களும் இருக்கின்றன. நினைத்ததைத் தரும் சிந்தாமணியான காவேரியின் பெருமையை இன் னும் சொல்கிறேன் கேள்" என்றார். அஸ்வமேத யாகம் செய்யத் தொடங்கிய அரிச்சந்திர மகா ராஜாவை, முனிவர்கள், பிராயச்சித்தமாக துலா மாதத்தில் காவிரியில் நீராடிவிட்டு வரச் சொன் னார்கள்.

நாத சந்மா என்பவன், பரம பதிவ்ரதையான அனவித்யை என்பவளுடன் காவேரி ஸ்நானம் செய்வதற்காகவும் இருவரும் மோக்ஷ சாம்ராஜ் யத்தைப் பெற வேண்டியும், கௌரி மாயூர க்ஷேத்திரத்தை நோக்கி வந்தான். முனிவர்கள், தங்கள் பத்திநிகளுடனும், புத்திரர்களுடனும் தங்கி, ஹோமாக்னி செய்து, பலவித தானங் களை செய்துவரும் அந்த மோக்ஷ புரியில் நாமும் தங்கி நற்கதி பெறுவோம் என்றான் நாத சன்மன். அப்படியானால். காவேரி, மற்ற எல்லா தீர்த்தங்களை விட எவ்வாறு உயர்ந்தது என்று, அனவித்யை கேட்க, நாதசந்மனும் கூறத் தொடங்கினான்.

## காவிரி உருவான கதை:

காவேரன் என்ற அரசன், தனக்குப் புத்திர பாக்கியம் இல்லாததால் பிரம்மாவைக் குறித்துத் தவம் செய்தான். பிரம்மாவானவர், "உனக்குப் புத்திர பாக்கியம் இல்லாவிட்டாலும், ஒரு குழந் தையை அளிக்கிறேன்" என்று கூறி, தன மனத்தால் ஒரு பெண் குழந்தையை உண்டாக்கி அவனிடம் அளித்தார்.

காவேரி என்ற பெயரில் அவனிடம் வளர்ந்த அப்பெண், தகுந்த கணவனை வேண்டித் தவம் செய்யலானாள். பின்னர், அகஸ்த்திய முனிவரைக் கண்ட காவேரியானவள், இவரே



தனது மணாளர் ஆவார் என்று நினைத்து, லோபாமுத்ரா என்ற பெயருடன் அவரை திருமணம் செய்துகொண்டவுடன், அவள் விரும் பியபடியே, நதி ரூபமாகி, பிற நதிகளுக்கும் மனிதர்களுக்கும் ஏற்பட்ட பாவங்களை நீக்கவும், மோக்ஷத்தை அளிக்கவும் மறு அம்சமாகத் திகழுமாறு, அகஸ்த்ய ரிஷி அருளினார்.

துலா மாதத்தில் காவேரியில் நீராடுபவர்கள், தங்கள் குடும்பத்தினரையும் சேர்த்து, மூன்று கோடி உறவினர்களையும் கடைத்தேற்றுகிறார்கள்.

துலா மாதத்தில் காவேரியில் நீராடி,முன்னோர் களுக்கு பிதுர்பூஜை செய்து அன்னதானம்,ஆடை தானம் அளித்தால் பித்ருக்கள் மகிழ்ந்து வாழ்த்துவார்கள். அழகு, ஆயுள், ஆரோக்கியம், சொல்வளம், கல்வி, வாழ்வில் சுகம் என எல்லாம் கிட்டு மென்று துலாக் காவேரி மகாத்மியம் கூறுகிறது. ஆதி, இடை, கடை என்னும் மூன்று அரங்கங்களையும் தன்னகத்தே கொண்டு, சதாசர்வ காலமும் இறைவன் நாராயணனின் திருவடியைத் தழுவி வணங்கும் காவேரியின் பேறும் பெருமையும் தன்னிகரற்றது.

தட்சிணகங்கை என்று போற்றப்படும் காவே ரிக்கு பொன்னி, விதிசம்பூதை, கல்யாணி, சாமதாயினி, கலியாண தீர்த்தரூபி, உலோப முத்ரா, சுவாசாஸ்யாமா, கும்பசம்பவ வல்லவை, விண்டுமாயை, கோனிமாதா, தக்கணபதசாவணி என பல பெயர்கள் உள்ளன.

காவேரியில் துலா ஸ்நானம் செய்து ஸ்ரீரங்க நாதரை வழிபட்டதன் பலனாக சந்தனு மகாராஜா பீஷ்மரை புத்திரனாக அடைந்தார்;

அர்ச்சுனன், துலா ஸ்நானம் செய்து ஸ்ரீரங்க நாதப் பெருமாளை துதித்து சுபத்ராவை மணம் புரிந்தான் என்று புராணம் கூறுகிறது.

முரன் முதலான அசுரர்களை அழித்ததால் மகாவிஷ்ணுவிற்குபற்றிய "வீரஹத்தி' தோஷம் போக்க, காவேரியில் ஐப்பசி மாதம் நாக சதுர்த்தியன்று துலா ஸ்நானம் செய்து, தோஷம் நீங்கப்பெற்றார் என்று துலாக் காவேரி மகாத்மியம் கூறுகிறது

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாத அமாவாசை யன்று கங்காதேவி காவேரியில் நீராடி மக்கள் தன்னிடம் கரைத்த பாவங்களைப் போக்கிக் கொள்கிறாள் என்பது புராணம்.

ஐப்பசி முதல் தேதி திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பராய்த்துறையிலும், இரண்டாவது நீராடலை ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் படித்துறையிலும்,

கடைசி தேதியன்று மயிலாடுதுறை நந்திக் கட்டத்திலும் முழுக்குப் போட வேண்டும் என்பது ஐதீகம்.

தலைக்காவேரி, ராமபுரம், ஸ்ரீரங்கம், திருப் பராய்த்துறை, திருவானைக்காவல், சப்தஸ்தானம், திருவையாறு, புஷ்பாரண்யம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, மயிலாடுதுறை, கும்பகோணம், திருவிடைமருதூர் முதலிய காவேரி நீர்த்துறைகள் துலா மாதத்தில் நீராட சிறந்தவையாகக் கருதப் படுகின்றன.

துலாக் காவேரி ஸ்நானம் செய்பவர்கள், காவேரி நதிக்குப் பூஜை செய்து வழிபடுவதுடன், அருகில் அரசமரம் இருந்தால் அதற்கு நீர் வார்த்து, அதை வலம்வந்து வணங்குவது புண் ணிய பலன் தரும்.

காவேரிக் கரையில் கோமாதா பூஜை செய்தால் மேன்மேலும் புனிதம் கிட்டும்.

துலா காவேரி ஸ்நானம் செய்யும்முன் தகுந்த புரோஹிதர்களை கொண்டு ஸ்நான ஸங்கல்பம் செய்துக்கொள்வது சிறந்தது. முடியாதவர்கள் கீழ்கண்ட ஸ்லோகத்தை கூறி துலா ஸ்நானம் செய்வது உசிதம்.

"கங்கேச யமுனே சைவ
கோதாவரி சரஸ்வதீ
நர்மதே சிந்து காவேரீ
ஜலேஸ்மின் சன்னிதிம் குரு"

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில்

புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

# 145 க்கும் மேற்பட்ட

இதழ்களை




# aanmeegamalar.com



இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# வெள்ளையரை மிரள வைத்த ஸ்ரீ சாங்கு சித்தர்

சென்னை கிண்டியில் MKN ரோட்டில் அருணா லாட்ஜூக்கு அருகே உள்ளது. ஸ்ரீ சாங்கு சித்தர் ஜீவசமாதி சுமார் 118 ஆண்டுகள் பழமையானது, அவர் அவதாரம் செய்தது சென்னை பரங்கி மலையில் தான். இவரின் சக்தி மிகவும் அற்புத மானது.

திருஞானசம்பந்தரே அருபமாக தோன்றி ஸ்ரீ சாங்கு சித்தருக்கு போதனைகள் புரிந்ததாக கூறப்படுகிறது, மேலும் திருஞானசம்பந்தரை வழிபட்டு வந்த கண்ணுடைய பிள்ளை என்பவரை குருவாக ஏற்று போதனைகளை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தியதால், ஸ்ரீ சாங்கு சித்தர் கண்ணுடைய பிள்ளையை தனது குருவாக ஏற்று போதனைகள் பெற்றதாகவும் கூறப் படுகிறது. (கண்ணுடைய பிள்ளை அவர்கள் எழுதிய ஒழிவிலொடுக்கம், மிக, மிக அற்புதமான High Phylosipcal book. ஒழிவிலொடுக்கம் என்கிற இந்த பொக்கிஷம் எளிய தமிழ் விளக்கத்தோடு கிடைக்கிறது.)

ஸ்ரீ சாங்கு சித்தர் பல்வேறு அதிசயங்களை பல கால கட்டங்களில் நிகழ்த்தியுள்ளார்.



சென்னையில் உள்ள ஸ்பென்சர் பிளாசாவை கட்டிய சிம்ப்சன் துரை என்ற வெள்ளைக்காரருக்கு ஸ்ரீ சாங்கு சித்தர் தனது சித்து வேலையை காட்டி அந்த வெள்ளைக்காரரையே மிரள வைத்து, அவரை தனது பக்தமான மாற்றிய சம்பவம் ஒன்று நடை பெற்றுள்ளது.

சிம்ப்சன் துரை என்னும் வெள்ளையர். இந்தியாவின் முதல் ஷாப்பிங் மாலான ஸ்பென்சர் பிளாசாவை கட்டினார். ஸ்பென்சர் பிளாசா, Higgin Bothams என அனைத்தும் இந்த சிம்ப்சன் துறையால் அன்று கட்டப்பட்டது.

சிம்ப்சன் துரைக்கு சனாதன தர்மத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. அவர் வெள்ளையராக இருந்தும். ஒரு ஹிந்துவாகதான் வாழ்ந்தார்.

ஒருநாள் அந்த சிம்சங் துறைக்கு அவரின் மனைவியிடம் இருந்து கடிதம் வந்தது.

அந்த லெட்டரில் ஒரு நல்ல செய்தி, ஒரு கெட்ட செய்தி இரண்டும் இருந்தது.

நல்ல செய்தி அவரின் மனைவி கர்ப்பமாக இருப்பது. கெட்ட செய்தி. சிம்சங்கின் மனைவி உடல் நிலை பலவீனமாவும், கவலை கிடைக் கிடமாக இருந்தது. தாய், சேய் இரு உயிரில் ஏதேனும் ஒரு உயிரை தான் காப்பாற்ற முடியும். அல்லது இருவர் உயிரையும் காப்பாற்ற முடியாது என்று சொல்லி மருத்துவம் பார்த்த அனைவரும் கைவிரித்து விட்டார்கள்.

என் உயிர் போனாலும்பரவா யில்லை. நாளை நம் குடும் பத்துக்கு என்று ஒரு வாரிசு வேண்டும் என்று நீங்கள் இறைவனை வேண்டி கொள்ளுங்கள். நீங்கள் அடிக்கடி கடிதத்தில் சாங்கு சித்தர் என்று ஒரு பெரிய மகானை குறிப்பிடுவீர்களே. அந்த மகானை வேண்டி கொள்ளுங்கள் என்று சிம்சங்கின் மனைவி கடிதத்தில் எழுதி இருந்தாள்.

அவள் எழுதிய கடிதத்தை சிம்சங் படிக்கும் பொழுது சிம்சங் அருகே சாங்கு சித்தர் அமர்ந்து இருந்தார்.

சாங்கு சித்தருக்கு எதுவுமே தெரியாததை

போல் சிம்சங் தனது மனைவியின் கடிதத்தை பற்றி கவலையோடு அவரிடம் சொன்னார்.

சாங்கு சித்தர் உடனே சிம்சங்கை பார்த்து. நீ முதலில் உன் மனைவிக்கு பதில் கடிதம் எழுது என்றார்.

உடனே சிம்சங் எழுதினார். அவர் எழுதிய பின் சாங்கு சித்தர் அந்த கடிதத்தை சிம்சங் துறையிடம் இருந்து பெற்று கொண்டார். நான் இந்த அறைக்குள் செல்கிறேன். நீ வெளியே தாழ்பாள் போடு. நான் கதவை தட்டினால் மட்டுமே நீ திறக்க வேண்டும் என்று அவர் சொல்ல. அதன்படி சிம்சங் துறையும் செய்தார்.

சுமார் 40 நிமிடங்களில் அவர் கதவை தட்ட சிம்சங் துறை கதவை திறந்தால்.

சாங்கு சித்தர் கையிலே ஒரு கடிதம். அதை அவர் சிம்சங் துறை கையில் கொடுத்தார். சிம்சங் துறை ஒன்றும் புரியாமல் விழித்தார்.

சாங்கு சித்தர் படிடா என்று சிம்சங்கை அதட்ட. சிம்சங் கடிதத்தை பிரித்து பார்த்தார், அந்த கடிதத்தில் இருப்பது அவர் மனைவியின் கையெழுத்து.

என்ன? ஒரு ஆச்சர்யம்.

40 நிமிடங்களில் சென்னை ஆலந்தூரில் இருந்து லண்டன் சென்று. சிம்சங்கின் மனைவியை கண்டு. சிம்சங் கொடுத்த பதில் கடிதத்தை கொடுத்து. சிம்சங்கின் மனைவி உடனே பதில் கடிதம் எழுதி கொடுத்த அந்த கடிதத்தை பெற்று. இத்தனையும் வெறும் 40 நிமிடங்களில் நடந்தது.

சிம்சங்கின் மனைவி அந்த கடிதத்தில் என்ன? எழுதி இருந்தாள் தெரியுமா?

சாங்கு சித்தரின் தலையில் இருக்கும் தலைப்பாகை முதலான அவரின் உருவ அமைப்பு. அவர் விபூதி பிரசாதம் கொடுத்து. உனக்கும், உன் குழந்தைக்கும் ஒன்றும் ஆகாது. எனது அருள் துணையாக இருக்கிறது என்று அவர் ஆசிர்வதித்தது. முதலான விஷயங்கள் அந்த கடிதத்தில் எழுதப்பட்டு இருந்தது.

இதைப் படித்தர வெள்ளையர் சிம்சங் சாங்கு சித்தரின் மகிமையை அறிந்து அவரை ஆனந்த கண்ணீருடன் வணங்கி தனது குருவாகவே ஏற்றுக் கொண்டார்.

ஒருசில மாதங்களுக்கு பிறகு சிம்சங்கின் மனைவிக்கு நல்லபடியாக பிரசவம் நடந்தது. அவளும், அவளின் குழந்தையும் நலமாக இருந்தார்கள்.

வெள்ளைக்காரனுக்கே ஒரு மிரட்சியான அனுபவத்தை தந்த ஸ்ரீ சாங்கு சித்தர், பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகிறார். சென்னை கிண்டியில் MKN ரோட்டில் அருணா லாட்ஜுக்கு அருகே இவரின் ஜீவசமாதி அமைந்துள்ளது.


ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
140 இதழ்களையும்
இலவசமாக டவுன்லோடு செய்ய கீழே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்யவும்...
Scan to Read-
aanmeegamalar
E-magazine







# கேலி வார்த்தையா குந்தாணி?

இன்றைய தலைமுறையினருக்கு குந்தாணி என்பது ஒரு கேலியான ஒருவரை திட்டுவதற்கு பயன்படும் சொல்லாக மட்டுமே தெரியும்!

ஆனால், குந்தாணி என்றால் வாய் அகன்ற பாத்திரம், பெருவுரல், குண்டா, நெல் சிதறாமல் இருக்க விளிம்புடன் உள்ள உரல், பருமனான நபர் என அகராதிகள் கூறுகின்றன.

உலக்கை கொண்டு உரலை குத்தும் (இடிக்கும்) பொழுது தவச (தானிய) மணிகள் வெளியே சிதறாமல் பாதுகாக்கும் வாயகன்ற புடைப்பான அமைப்புக்கு பெயர்தான் குந்தாணி!

குத்துதல் = உலக்கையாற் கூலத்தைத் துவைத்து, இடித்து நொறுக்குதல்.

மேல்பகுதியில் வாய் அகன்றும் கீழ்பகுதியில் உரலுடன் பொருந்துமாறு ஒடுங்கி புடைப்பான வளையம் போன்ற வடிவத்தில் உரலைச் சுற்றி ஒரு தடுப்பைப் போல பயன்படுகிறது குந்தாணி.

முற்காலத்தில் உரல்கள், குந்தாணி ஆகியவை கருங்கற்களால் செய்யப்பட்டது. உலக்கைகள் மரத்தால் செய்யப்பட்டு இரு முனைகளிலும் பூண் போடப்பட்டிருக்கும். (உலக்கைப் பூண் என்பது மரத்துக்கு போடப்படும் இரும்புக் கவசம்) .

பிற்காலத்தில் வேம்பு, பாலை போன்ற மரத்தில் செய்யப்பட்ட உரல் களும் வழக்கில் இருந்தன.

உரல், உலக்கை, குந்தாணி மூன்றும் ஒரே தொகுப்பைச் சேர்ந்த கருவிகள்.

குறிப்பு:

இடை சுருங்கி இருக்கவேண்டிய பெண்டிர் இடை பெருத்திருந்தால் 'குதிர் போல இருக்கிறாள், குந்தாணி போல் இருக்கிறாள்' ... என்று உவமைச் சுட்டால் சொல்வது வழக்காம். இது ஒரு நையாண்டி வழக்கு.





# தங்கைக்கு சீதனமாக அனைத்தையும் கொடுத்த சிவன்

## சிவபெருமானின் பக்தர்களுக்கு வாரி வழங்கும் கஜலட்சுமி

தனது தங்கை மகாலட்சுமியை, மகாவிஷ்ணுவிற்கு திருமணம் செய்துவைத்து, தன்னிடம் உள்ள அனைத்து செல்வங்கள், ஐஸ்வர்யங்களையும் மகாலட்சுமிக்கு சீர்வரிசையாக கொடுத்துவிடுகின்றார் சிவபெருமான்.

தனக்கு என்று ஏதும் இல்லாமல், அத்தனையும் தங்கை எனக்காக கொடுத்து விட் டாரே அண்ணன் சிவபெருமான், என மன வருத்தத்துடன், மணவாளன் கரம் பிடித்து ஸ்ரீ லட்சுமி தாயார் புகுந்த வீடு புறப்படுகிறார்.

தனது பக்தர்கள் ஏதாவது கேட்டு வந்தால் இனி நமது அண்ணன் எதை தர போகிறார்? இனி நமது அண்ணன் என்ன செய்வார்? என்கிற கவலையில் ஆழ்ந்துவிடுகிறார் மகாலட்சுமி.

மகாலட்சுமியின் மன வருத்தத்தைஅறிந்த, மணவாளனாகிய ஸ்ரீமந் நாராயணர், கவலைப் படாதே லட்சுமி, ஓம் நமசிவாய மந்திரத்தை யார் உச்சரித்தாலும் அவர்களுக்கு ஐஸ்வர்யத்தை நாம் வாரி வழங்குவோம் என ஆறுதல் படுத்துகின்றார்.

கோவிலுக்கு சென்று நமசிவாய மந்திரத்தை உச்சரிக்கின்ற நமக்கு சிவன் அருள்புரிவதுடன், மகாலட்சுமியும், மகாவிஷ்ணுவும் சகல ஐஸ்வர்யங்களையும் தருவார்கள் என்பதை உணர்த்தவே அனைத்து சிவாலயங்களிலும் கருவறை நுழைவு வாயிலில் கஜலட்சுமிதாயார் உருவம் பொறிக் கப்பட்டிருக்கும்.

என்னை வணங்க வந்த நீ அவர்களையும் சிறிது நினைத்துக் கொள்!! என்பதை சிவ பெருமான் நமக்கு எடுத்துரைப்பதற்காகவே கருவறையின் நுழைவாயில் மேல் கஜலட்சுமி தாயார் உருவத்தை நமது முன்னோர்கள் நிர் மாணித்து இருக்கிறார்கள்!!

கோயில்களில் இருக்கின்ற ஒவ்வொரு சிற்பமும், ஒவ்வொரு வகையில், ஏதோ ஒரு காரண, காரியத்திற்காக நமது முன் னோர்கள் வடிவமைத்திருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது. முடிந்த அளவு அந்த காரணத்தை அறிய நாமும் முற்படுவோம்.



# உலகமே கொண்டாடும் தீபாவளி பண்டிகை

தீபாவளி பண்டிகை ஐப்பசி மாதத்தில் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை மற்றும் அதற்கடுத்த சுக்கிலப்பிரதமை, பௌபீச்சு ஆகிய நாட்களில் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் சில ஆண்டுகளில் ஐப்பசி அமாவாசை முன்தினம் நரக சதுர்த்தசி அன்று கொண்டாடுகிறார்கள்.

தீபாவளி அல்லது தீப ஒளித்திருநாள் ஐந்து நாட்கள் கொண்டாடப்படுகின்ற பண்டிகையாகும். இது இந்து, சீக்கியம், சைனம் மற்றும் பௌத்தம் மதத்தின் மிகவும் பிரபலமான பண்டிகைகளில் ஒன்றாகும். இப்பண்டிகை இந்தியா இலங்கை சிங்கப்பூர் உட்பட பல நாடுகளிலும் கொண்டாடப் படுகிறது.

சில இடங்களில் வெவ்வேறு நாட்களில் கொண் டாடப்படுகிறது. அதாவது, வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

பெரும்பாலான ஆண்டுகளில் தீபாவளிபண் டிகை ஐப்பசி மாத அமாவாசை நாளன்று கொண் டாடப்படுகிறது.

இந்தியாவைப் பொருத்தவரை வருடத்தின் 365 நாட்களும் 365 திருவிழாக்கள் இருந்தன. மனித பிறவியின் வாழ்க்கையே கொண்டாட்டமாய் மாறிப்போவதற்கு இதுபோல் ஏற் பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால், தற்போது எஞ்சி யுள்ளதோ 30, 40 விழாக்கள் மட்டுமே. அலுவலகமும், தொலைக்காட்சி யும் நம் திருவிழாக்களை விழுங்கிவிட்டன. அதிலும் நடைமுறையில் தீவிரமாக இருப்ப தென்னவோ 8, 10 விழாக்கள் மட்டுமே. இதனை அப் படியேவிட்டுவிட்டால் அடுத்த தலைமுறைக்கு கொண்டாட்டங்களே இருக்காது.

பொருள் ஈட்டுவதும் உணவு உண்பதும் என வாழ்க்கை கடந்து போய்விடும். பலரும் அப்படித் தான் வாழ்ந்து வருகிறார்கள்? விழா நாளன்று விடுமுறை, நீண்ட நேரத் தூக்கம், திரைப்படம், தொலைக்காட்சிபெட்டி என்றாகிவிட்டது வாழ்க் கை.

இந்தியா, நேபாளம், இலங்கை, மியான்மர், சிங்கப்பூர், மலேசியா மற்றும் பிஜி போன்ற நாடுகளில் தீபாவளி திருநாளன்று அரசு விடு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்களும், சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர். மொத்த தீபாவளியைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி கொண்டாடுவதற்கு பல காரணங் களை, புராணக் கதைகளின் வழியாகக் கூறுகின் றனர்.

இராமன் பதினான்கு வருடங்கள் வனவாசம் முடித்து, நாடு திரும்பும் போது மக்கள் விளக் கேற்றி வரவேற்றனர்.

புராணக் கதைகளின் படி, திருமால் வராக அவதாரம்



(காட்டு பன்றி) எடுத்திருந்தபோது அவரது இரு மனைவியருள் ஒருவரான, நில மகளான (பூமாதேவிக்கு) பிறந்த மகன் பவுமன் என்ற பெயரில் பிறந்தான். (பவுமன் என்றால் அதிக பலம் பொருந்தியவன், பலமானவன் என்று அர்த்தம்). பின்பு அவன் இன்றைய அசாம் மாகாணத்தில் உள்ள பிராக்சோதிசா என்னும் நாட்டை ஆண்டு கொண்டு இருந்தான். பின்பு தனக்கு யாராலும் மரணம் நேரக் கூடாதென்று பிரம்மனை நோக்கிக் கடும் தவம் புரிந்தான்.

அப்போது அவன் முன் காட்சியளித்தபிரம்மன் என்ன வரம் வேண்டும் என்று கேட்டபோது எனக்கு எந்த நிலையிலும் மரணம் ஏற்படக் கூடாதென்று வரம் கேட்டான், அப்போது பிரம்மன் இவ்வுலகில் பிறக்கும் உயிர்கள் யாவும் ஒரு நாள் இறந்தே தீரும் என்றார் பிரம்மன். பின்பு நரகாசுரன் என் தாயால் மட்டுமே மரணம் நேர வேண்டும் என்று வரம் வாங்கினான்.

பின்பு மனிதன் ஆக இருந்து ஓர் அசுரன் ஆக மாறியதால், அவனுக்கு நரகாசுரன் என்ற பெயர் ஏற்பட்டது. (நர+மனிதன் சூரன்+அசுரன்) என்ப தன் சுருக்கமே நரகாசுரன் ஆகும்.

ஆன்மிகமலர் .காம்

தேவர்களின் அன்னையாகக் கருதப்படும் அதிதியின் காது வளையங்களை திருடியும், ஏராளமான பெண்களை சிறை பிடித்தும் துன் புறுத்தி வந்தான்.

அவனின் அநீதிகளை நிறுத்த வேண்டி, கிருஷ்ணர் தனது மனைவியரில் ஒருவரான சத்யபாமா (பூமாதேவியின்) அவதாரமாவார். அவருடன் சென்று நரகாசுரனை அழிக்க பல வகையில் முயற்சித்தார், ஒரு வழியாக கிருஷ்ணர் தனது மனைவி சத்யபாமா உதவி யுடன், நரகாசுரனை சத்யபாமா கையால் அழிக்க வைத்தார் கிருஷ்ணர்.

இந்த நரகாசுரனின் வதத்தை மகாபாரத்தில் சிவந்தமண்களம். அதாவது (சிவந்த+(இரத்தம்) + மண்(பூமி)+களம் (போர்புரியும்இடம்) என குறிப் பிடப்பட்டுள்ளது.

பின்னர் கிருஷ்ணர், நரகாசுரன் பிடியில் இருந்த அனைத்துப் பெண்களையும், அதிதியின் காது வளையங்களையும் மீட்டு தேவர்களிடம் ஒப்படைத்தார். நரகாசுரனை அதிகாலையில் வதம் செய்து முடித்த கிருஷ்ணர் பகவான், எண்ணை தேய்த்து தலை முழுகினார்.

அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று கேட்ட வரத்திற்கிணங்க, தீபாவளி மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றது.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203



கந்த புராணத்தின் படி, சக்தியின் 21 நாள் கேதாரகௌரி விரதம் முடிவுற்றது இத்தினத்தில் தான். விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று 'அர்த்தநாரீசுவர' உருவமெடுத்தார்.

இதைப்போன்று இந்து மதத்தினர் மட்டு மல்லாமல், சீக்கிய, சமண, பௌத்தர்களும் இந் நாளை கொண்டாடுகின்றனர்.

### சீக்கியர்களின் தீபாவளி

1577-இல் இத்தினத்தில், பொற்கோயில் கட்டுமான பணிகள் துவங்கியதையே சீக்கியர் கள் இந்நாளில் கொண்டாடுகின்றனர்.

### சமணர்களின் தீபாவளி

மகாவீரர் வீடுபேறு அடைந்த தினத்தை நினைவு கூர்ந்து, இத்தினத்தைச் சமணர்கள் கொண்டாடுகின்றனர்.

### பௌதத்தில் தீபாவளி

பௌத்தத்தில், தீபாவளியை 'தீபதான உற்சவம்' என்றும் அழைப்பர்.

**தீபாவளி நல்ல நேரம்: 24.10.2022**

| | |
|---|---|
| காலை | 6.15 முதல் 7.15 வரை |
| மாலை | 4.45 முதல் 5.45 வரை |

இன்னொரு புராணமான, இராமாயண இதிகாசத்தில் இராமர் இராவணனை அழித்து விட்டு தனது வனவாசத்தையும் முடித்து விட்டு மனைவி சீதையுடனும் தம்பி இலட்சும ணனுடனும், அயோத்திக்கு திரும்பிய நாளை அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நாளே தீபாவளி யாக கொண்டாடப்படுவதாக கருதப்படுகிறது.

# தீபாவளியும் அண்ணன் தங்கை பாசமும்

தீபாவளி பண்டிகை ஐந்து நாட்கள் கொண்டாடப்பட வேண்டும் என்று பழமையான கதைகளில் கூறப்பட்டுள்ளது. இந்த ஐந்து நாட்களும் மிகவும் விஷேஷ நாட்களாகும்.

அதாவது தீபாவளியின் முதல் நாள் தன்வந்தரி திரியோதாஷி என்று அழைக் கப்படுகிறது. இந்த நாளில், மருத்துவக் கடவுளான தன்வந்தரியை வணங்க வேண்டும்.

தீபாவளியின் இரண்டாவது நாள் நரக சதுர்தாஷி என்று அழைக்கப்படுகிறது.

மூன்றாவது நாள் லட்சுமி பூஜை செய்வார்கள். மகாபலி சக்ரவர்த்தி லட்சுமிதேவியை சிறை பிடித்து வைத்திருந்தான், வாமன அவதாரம் எடுத்து மீட்ட தினம் இன்று இதனால் லட்சுமி பூஜை மிகவும் விஷேசமாகும். இன் றைய தினம் லட்சுமியை வழிபடுபவர்கள் வீட்டில் லட்சுமி கடாட்சம் பெருகும்.

நான்காவது நாள் கோவர்தன் பூஜை, கிருஷ்ணர்இந்திரனுக்கு பதிலாக மலையானகோவர்த்தன கிரியிடம் பிரார்த்தனை செய்யப் போவதாக பிருந்தாவன மக்களிடம் கூறிய நாள்.

ஐந்தாவது நாள் பாய் தூஜ் என்று கொண்டாடப்படுகிறது, அதாவது சகோதர சகோதரிகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாளாகும். மரணத்திற்கு அதிபதியாக விளங்கும் எமதர்மராஜன், தனது சகோதரி யமுனாவை சந்தித்து ஒரு வரம் அளித்தார். தீபாவளித் திருநாளில், எவன் ஒருவன் தன் சகோதரியை சந்திக்கிறானோ அவன் வாழ்வில் செய்த பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுதலைப் பெற்று மோட்சத்தை அடைவான் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது.



# தீபாவளி இந்துக்கள் பண்டிகையா? ஆதாரமில்லாமல் குழப்பும் ஆய்வாளர்கள்

இந்தியா முழுவதுமுள்ள இந்துக்களால் பரவலாகக் கொண்டாடப்படும் பண்டிகையான தீபாவளி, இந்துக்கள் வசிக்கும் பிற நாடுகளிலும் கூட உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. ஆனால், இந்தப் பண்டிகை எப்படித் தோன்றியது என்பது குறித்து நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு கதை சொல்லப்படுகிறது.

அந்த வகையில் ஒருசில ஆய்வாளர்கள் தங்கள் யூகங்களின் அடிப்படையில் இது இந்துக்கள் பண்டிகையல்ல என்ற வாதத்தையும் ஆதாரமற்ற வகையில் பரப்பியும் வருகின்றனர்.

தீவிர பிராமண எதிர்ப்பாளரான பண்டிதர் அயோத்திதாஸர் தீபாவளி பண்டிகை பௌத்தப் பண்டிகை; அதனை பிராமணர்கள் திருடிக் கொண் டார்கள் என்கிறார். தீபாவளிப் பண்டிகை குறித்து கட்டுரை ஒன்றை 1907ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் தேதி எழுதியிருக்கிறார் அயோத்திதாஸர். தீபாவளி பண்டிகை என்னும் தீபவதி ஸ்னான விவரம் என்ற அந்தக் கட்டுரையில், தீபாவளிப் பண்டிகையை ஒரு பவுத்தப் பண்டிகை என குறிப்பிடுகிறார் அயோத்திதாஸர்.

ஆனால், மயிலை சீனி.வேங்கடசாமி,சமணர் களிடமிருந்து இந்துக்கள் பெற்ற பண்டிகைதான் தீபாவளி என்கிறார். சமண மதத்தின்கடைசி தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் பாவாபுரி நகரத்தில் அரசனின் அரண் மனையில் தங்கி யிருந்தபோது, அங்குள்ள மக்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இரவு முழுவதும் நடைபெற்ற இந்தச் சொற் பொழிவு விடியற்காலையில் முடிவடைந்தது. இதனால் மக்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்லாமல் ஆங்காங்கே உறங்கிவிட்டனர். மகாவீரரும் தனது இருக்கையிலேயே வீடுபேறடைந்திருந்தார்.

பொழுதுவிடிந்ததும் விழித்துப் பார்த்த மக்கள் மகாவீரர் வீடுபேறடைந்திருந்ததை உணர்ந்தனர். தகவல் அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த அரசன் மற்ற அரசர்களோடு யோசனை செய்து உலகத்திற்கு ஞானஒளியாகத் திகழ்ந்த மகாவீரரை மக்கள் நினைவுகூர்ந்து வழிபடும் பொருட்டு அந்த நாளில் வீடுதோறும் விளக்குகளை ஏற்றி வைத்து விழா கொண்டாடும்படி செய்தான்.

மகாவீரர் விடியற்காலையில் வீடு பேறு அடைந்த தால்தான் தீபாவளியும் விடியற்காலையில் கொண் டாடப்படுகிறது என்கிறார் சீனி. வேங்கடசாமி.

ஜி.யு.போப் என்ற வெளிநாட்டுக்காரர், தமி ழகத்தில் தனது பெயரை வீரமாமுனிவர் என்று மாற்றி வைத்துக் கொண்டு ஒருசில வர லாற்று ஆய்வுகளை செய்துவந்தார், இவரை ஒருசில தமிழர்கள் எதிர்க்கவும் செய்தனர், இவர் இந் திய கலாச்சாரத்தையும் தமிழ் மொழியையும் சீர்குலைப் பதாக எதிர்ப்பாளர்கள் காரணம் கூறினர்.

இப்படிப்பட்ட விமர்சனத்திற்குரிய, இவரின் நூலை மேற்கோள் காட்டி, "வீரமாமுனிவரின் சதுரகராதி 1732–ல் வெளியிடப்பட்டது அதில் தீபாவளி என்ற சொல் கிடையாது. தமிழ் இலக்கியங்களிலும் 19ஆம் நூற்றாண்டுவரை தீபாவளி என்ற சொல் ஏதும் கிடையாது. 1842ல் இலங்கையில் வெளியிடப்பட்ட மானிப்பாய் தமிழ் தமிழ் அகராதியில் இந்தச் சொல் இருக்கிறது. அதற்கு புராண விளக்கங்கள் கொடுக் கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தத் தருணத்தில் இந்த விழா அறிமுகமாகியிருக்கலாம்" என்கிறார் ஆய்வாளர் பொ. வேல்சாமி.

பண்பாட்டு ஆய்வாளரான தொ. பரமசிவனும் பழந்தமிழ்நாட்டில் தீபாவளி என்ற பண்டிக்கை இல்லை என்கிறார். 'சமூக வரலாற்றுப் பார்வை யில் திருவிழாக்கள்' என்ற கட்டுரையில் இது குறித்துப் பேசும் தொ. பரமசிவன், "தமிழ்நாட்டுத் திருவிழாக்களின் பொதுவான கால எல்லை தை மாதம் முதல் ஆடி மாதம் வரையே ஆகும். தமிழகம் வெப்ப மண்டலத்தில் உள்ள நிலப்பகுதியாகும்.

எனவே வேளாண் தொழில்சார்ந்த பணிகள் இல்லாத காலப்பகுதியே தமிழர்களின் திரு விழாக் காலமாகிறது. தமிழ்நாட்டின் நாட்டார் தெய்வங்கள் இந்தக் கால அளவில்தான் கொண்டாடப்படுகின்றன. இன்று பரவலாகக் கொண்டாடப்படும் தீபாவளி, விசயநகர மன்னர்களின் காலத்தில் தெலுங்கு பிராமணர் வழியாக தமிழ்நாட்டிற்கு வந்த திருவிழாவாகும். வடநாட்டில் இது சமணசமயத்தைச் சேர்ந்த திருவிழா ஆகிறது" என்கிறார் தொ. பரமசிவன்.

ஆனால், பெரும்பாலானவர்கள் ஒரு பண்டிகை யை மகிழ்ச்சியாகக் கொண்டாடும்போது அது எங்கிருந்து வந்தது, அதனை நாம் கொண்டாடலாமா என்ற ஆராய்ச்சிக்குள் புகுவதைவிட்டுவிட்டு, விருப்பமிருந்தால் கொண்டாடுவதே சிறந்தது என்கிறார் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளரான ஆ. சிவசுப்பிரமணியம்.

"எல்லோரும் மகிழ்ச்சியாக பட்டாசு வெடித்து, புத்தாடை அணிந்து கொண்டாடும்போது அதை விமர்ச்சித்து, வருத்தமேற்படுத்தி என்ன ஆகப் போகிறது. விருப்பமிருப்பவர்கள் கொண் டாடட்டும். விருப்பமில்லாதவர்கள் சும்மா இருக் கலாம்" என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியம்.

வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வுகள் 17ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்தாலும், அதற்கு முந்தைய நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று தீபாவளி பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

கி.பி.16ஆம் நூற்றாண்டு முதல் கோயில்களில் தீபாவளி விழா கொண்டாடப்பட்டு வருவதற் கான சான்றுகள் திருப்பதி திருமலை வேங் கடவன் கோயிலில் உள்ள ஒரு தமிழ்க் கல் வெட்டிலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு செப்பேட்டிலும் காணப்படுகின்றன.

ஆனால் ஆய்வாளர்கள் இந்த கல்வெட்டுக்கள் கிடைப்பதற்கு முன்பே மறைந்துவிட்டதால் தீபாவளி என்ற ஒன்று இந்துக்களின் பண்டிகை கிடையாது என்று தங்கள் வாழ்க்கையை தொலைத்து கண்டுபிடித்த கண்டுபிடிப்புகள் வீணாகிப்போனது.

உண்மையில் தீபாவளி பல பெயர்களில் பல மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டு தொடர்ந்து கொண் டாடப்பட்டு வரும் பண்டிகை என்று ஒருசில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தீபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன்பின் தலைக்கு எண்ணெய் வைத்து குளிக்கும் பழக்கம் புகுத்தப்பட்டு, இனிப்பு செய்து படையலிடும் பழக்கம் உருவாகி, வெடிப்பொருட்களை பயன்படுத்தி மகிழ்ச்சியை உருவாக்கி என்று ஒவ்வொரு விஷயங்களும், ஒவ்வொரு காலகட்டத்தில் புகுத்தப்பட்ட மிகப்பெரிய விழாவாகும் என்றும் கூறுபவர்களும் உண்டு.

எது எப்படியோ தீபாவளி என்பது இறைவன் பெயரைச் சொல்லி குடும்பத்தினர் ஒன்று கூடி, மகிழ்ச்சியை பகிர்ந்து, தீயவற்றை செய்தால் அழிவு நிச்சயம் என்ற கருத்தை மனதில் பதிந்து, உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சியை பெற்று, இறை நம்பிக்கையுடன், தீயவற்றை போக்கி, வாழ்வில் புத்தொளி பரவும் வகையில் கொண்டாடப்படும் ஒரு அற்புத நிகழ்வை நாமும் வரவேற்போம்.


16ம் நூற்றாண்டிலேயே தமிழர் கொண்டாடிய தீபாவளி

★ கோயில் கல்வெட்டு, செப்பேடுகளில் அரிய குறிப்புகள்

★ குடவாயில் பாலசுப்ரமணியன் தகவல்

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து
Scan to Read- aanmeegamalar Website
அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்







# தலைநகரில் வெகு விமரிசையாக நடைபெற்ற நவராத்திரி விழா கோலாகல கொண்டாட்டம்

தில்லி பஜனை சமாஜ் ஸ்ரீ ராம் மந்திர் டிரஸ்ட் மூலம் புது தில்லி துவாரகா செக்டார் 7 இல் உள்ள ஸ்ரீ ராம் மந்திர் வளாகத்தில் நவராத்திரி கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு கோவிட் காரணமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, அங்கு அனைத்து நிகழ்ச்சிகளும் முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்டன.

செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 5, 2022 வரை, கன்யா பூஜை, கோ பூஜை மற்றும் அன்ன தானம் செய்யப்பட்டது. அக்டோபர் 2 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சுவாசினி பூஜையில் சுமார் 85 சுவாசினிகள் விளக்கு பூஜை நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பூஜையின் முடிவில் அனைத்து சுவாசினி களுக்கும் புடவை பிரசாதமாக வழங்கப்பட்டது, இது சுமார் 11 ஆண்டுகளாக கோயிலில் பின்பற்றப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு அக் டோபர் 5 ஆம் தேதி, விஜய தசமி தினத்தில், சண்டி ஹோமம் செய்யப்பட்டது, அங்கு கன்யா பூஜை, வடு பூஜை மற்றும் தம்பதி பூஜை ஆகிய வை சிறப்பாக நடைபெற்றது.



செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 5 வரை, பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் சங்கத்தின் பிற அமைப்புகளில் ஏற்பாடு செய்யப்பட்டன. புரட்டாசி மாதம், அனைத்து சனிக்கிழமைகளிலும் மாலையில் தீப பிரதக்ஷணத்துடன் கூடிய திவ்ய நாம பஜனை, ராமகிருஷ்ண பாகவதர், டெல்லி பஜனை சமாஜத்தின் பாகவதங்களுடன் சுனில் பாகவதர் போன்றவர்களால் நடத்தப்பட்டது.

தில்லி பஜனை சமாஜ், அறுபது ஆண்டுக ளுக்கும் மேலாக தனது பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது, மேலும் இந்த சமாஜத்தில் இருந்து, டெல்லி முழுவதும் கரோல் பாக் மற்றும் ராம கிருஷ்ணா புரத்தில் முக்கிய பகுதிகளில், பல்வேறு மத நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது.

சமாஜ் பல்வேறு மதச் சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்காற்றியது, குறிப்பாக பத்ரிநாத் மற்றும் கேதார்நாத்துக்கு 'நோ பிராபிட் நோ லாஸ்' என்ற கருத்துருவில். ஸ்ரீராம நவமி விழா, ஸ்ரீ கோகுலாஷ்டமி விழா, 41 நாட்கள் மண்டல பூஜை, தனுர் மாச பூஜை போன்றவற்றில் கரோல் பாக் மற்றும் ராம கிருஷ்ணா புரத்தில் சமாஜம் ஈடுபட்டது, இப்போது அதன் அனைத்து நிகழ்ச்சிகளும் ராமில் உள்ள சொந்த வளாகத்தில் நடத்தப்படுகின்றன. மந்திர் தானே.

400 சதுர மீட்டர் நிலத்தில் கட்டப்பட்ட ஸ்ரீ ராம் மந்திர், DDA ஆல் ஒதுக்கப்பட்டது, பின்வரும்









சிலைகள் உள்ளன: ஸ்ரீ ராமர், ஸ்ரீ காமேஸ்வரர், தேவி காமேஸ்வரி, ஸ்ரீ அம்ருத கணபதி, ஸ்ரீ சங்கட விமோச்சன ஹனுமான் மற்றும் நவக்கிரக சன்னதி ஆகியவை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. நூதன கும்பாபிஷேகம் 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு, காஞ்சிபுரம் காஞ்சி காமகோட்டி பீடத்தின் சங்கராச்சாரியார் ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் ஆசீர்வாதத்தின் கீழ் நடைபெற்றது. 2016 ஆம் ஆண்டு, காளாஞ்சேரி ஸ்ரீ சீதாராமன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், ராஜ கோபுரம் கட்டப்பட்டு, கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

## ஸ்ரீ வரத கணேசர் கோவிலில் கொலு

ஸ்ரீ வரத கணேசர் கோவில், டெல்லியில் உள்ள டிஸ்லாத் தோட்டத்தில் அமைந்துள்ளது, மேலும் செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 4 வரை நவராத்திரி விழா 2022 கொண்டாடப்பட்டது. தினமும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் மற்றும் பிற ஸ்லோகங்களைச் சொல்லி பிரம்மாண்டமாக கொண்டாடினர்.

அக்டோபர் 2 ஆம் தேதி திருவிளக்கு பூஜை ஸ்ரீ துர்க்கை, ஸ்ரீ லட்சுமி மற்றும் ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கு சஹஸ்ரநாம அர்ச்சனையுடன் 30க்கும் மேற்பட்ட பெண்களால் செய்யப்பட்டது. இக்கோயிலில் நவராத்திரி விழா கடந்த 10 ஆண்டுகளாக பக்தர்கள் பங்கேற்புடன் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

## ஸ்ரீ சங்கடஹர கணபதி கோயிலில் கொலு

கிழக்கு டெல்லியில் உள்ள ஸ்ரீ சங்கடஹர கணபதி கோவிலில், 'கொலு' வைக்கப்பட்டு, தினமும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் செய்யப்பட்டது. நவராத்திரியின் போது ஏராளமான பெண்கள் கலந்து கொண்ட விளக்கு பூஜையும் நடைபெற்றது.

வசுந்தரா என்கிளேவ் சர்வேஸ்வர சமாஜத்தால் நிர்வகிக்கப்படும் இந்த கோயில் டிடிஏவால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் கட்டப்பட்டு இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது.

## உலக அமைதிக்காக நொய்டா ஸ்ரீ சுப்ரமணியர் கோயிலில் லட்சார்ச்சனை நடைபெற்றது

நவராத்திரியை முன்னிட்டு, வேதப் பிரச்சார சன்ஸ்தான் (விபிஎஸ்) நிர்வாகம், அக்டோபர் 2 ஆம் தேதி, நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில், 'சர்வலோக அமைதிக்காக ஸ்ரீ சுப்ரமணியர் லட்சார்ச்சனை மற்றும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம லட்சார்ச்சனையை ஏற்பாடு செய்தது. ஸ்ரீ சுப்ரமணியர் புஜங்கம், முருக கோஷம், மற்றும் பக்தர்கள் ஸ்ரீ கார்த்திகேயரை போற்றி பல்வேறு பக்தி பாடல்கள் பாடிய குழு பாராயணத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. பிரம்மஸ்ரீ ஸ்ரீராம் வாத்தியார் மேற்பார்வையில், கோவில் வாத்தியார்களான மணிகண்டன் சர்மா மற்றும் மோகித் மிஸ்ரா ஆகியோரின் உதவியுடன் லட்சார்ச்சனை நடைபெற்றது. விழாவை சிறப்பாக நடத்த உதவிய கே.நடராஜனையும், அர்ஜுனையும் வீடுகளில் இருந்து பிரசாதம் கொண்டு வந்த பெண்களுக்கு கோயில் நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்தனர்.



எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்:
9811161370

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# 2022 அக்டோபர்

## (16–10–22 முதல் 31–10–22 வரை)

## மேஷம் முதல் மீனம் வரை

# 12 ராசிகளுக்கான பலன்கள்

குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70–75% வரையிலும், கோட்சாரம் 25–30% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும். ராசி, லக்கினம் இரண்டில் எது வலுவாக உள்ளதோ அதை பொறுத்தே பலன்கள் அமையும். பலன்களை ராசிப்படியும், லக்கினத்தையும் ராசியாக பாவித்தும் ஒப்பிட்டுப்பார்த்து நடைமுறையில் பொருந்தும் பலன்களை அறிந்து கொள்ளவும்.



ஜோதிட ஆலோசனைக்கு:
ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர்,
கிருஷ்ணகிரி.
**கி.கார்த்திகேயன்.**
செல்: 7010909413.

## மேஷம்:



ராசியில் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், ராசி நாதன் செவ்வாய்ராசிக்கு மூன்றில், பஞ்சம, யோகாதி பதி சூரியன் 7 இல், 3, 6–ஆம் அதிபதி புதன் 6இல், தன மற்றும் சப்தமாதிபதி சுக்கிரன் 7 இல்உடன் கேது, கர்மாதிபதி சனிபகவான் 10 இல் மற்றும் தனகாரகன் குரு ராசிக்கு 12 இல், குடும்பம், தொழில் நிலவரம் மிகவும் நன்றாக இருக்கும். இளைய சகோதரத்தால் ஆதாயம் நன்மை. பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். பிள்ளைகளுக்கு நன்மை. பிள்ளைகள் வழியில் விரைய செலவுகள் ஏற்படும். அரசு வழி அனுகூலம், மேலதிகாரிகளின் ஆதரவு, தந்தை, தந்தைவழி உறவுகளால் நன்மை. மூத்த சகோதரருக்கு அனுகூலமற்ற நிலை. தாயாரின் உடல் நிலை சீராகும். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்கள் வீடு திரும்புவார்கள். பணியிடத்தில் துணையில் செல்வாக்கு கூடும். பதவி உயர்வு போன்ற அனுகூல செய்திகளை எதிர்பார்க்கலாம். திடீர் அதிர்ஷ்டம், ஆபரண பொருட்கள் சேர்க்கை உண்டாகும். படபடப்பு, டென்சன், தலைவலி போன்ற தொந்தரவுகள் சிலருக்கு உண்டாகலாம். தாயாரை கோயில் குளம் போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கு அழைத்து செல்வீர்கள். விசேஷ வைபவங்களில் கலந்து கொள்வீர்கள். வெளி யூர் பிரயாணம் உண்டு. வியாபாரிகள் புதிய தொழில், தொழில் விருத்திக்கு திட்டமிடுவீர்கள். பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலை நன்றாக இருக்கும். மாணவர்கள் படிப்பு சீராக செல்லும். அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் ஆதாயம் காண்பர். புதிய முயற்சிகளுக்கு 22, 23 தேதிகள் அனுகூலமானவை. 25, 26 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

## ரிஷபம்:



ராசிநாதன் சுக்கிரன் ராசிக்கு 6–இல் மறைவுஉடன் 4–குடைய சூரியன் கேது சேர்க்கை. இரண்டில் 8, 11 குடைய செவ்வாய், 2, 5 குடைய புதன் தன் சொந்த வீடான கன்னியில், 6 இல் கேது குருவின் சாரம், 9 இல் பூரண யோ காதிபதி சனி பகவான், 11 இல் அஷ்டம மற்றும் லாபாதிபதி குரு, 12 இல் ராகு சுக்கிரன் சாரம். குடும்ப, தொழில் நிலவரம் சீராக இருக்கும். பிள்ளைகளின் நீண்டகால ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். தந்தை, தந்தை வழி உறவுகளின் வகையில் மனக்கசப்பு ஏற்படும். பொறுமையாக செல்லவும். துணையில் உடல் நலனில் அக்கறை தேவை. சிறிய தொந்தரவு என்றாலும் மருத்துவ

ஆலோசனை செய்வது நன்று. ஆரோக்கியம் குறித்து தேவையில்லாத பயம், கவலை வந்து போகும். மூத்த சகோதர வழியில் உதவி, அனுகூலம் உண்டாகும். பெரியோர், குல தெய்வ வழிபாடு சிலருக்கு உண்டாகும். பணியாளர்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களைஅனுசரித்து செல்லவும். நீண்ட தூர பயணங்களை ஒரு மாத காலத்திற்கு தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத பொருள், பண இழப்பு சிலருக்கு உண்டாகலாம். பயணத்தில் கவனம் தேவை. இளைய சகோதர வகையில் மனக்கசப்பு உண்டாகும்.தொழிலாளர்கள், வியாபாரிகள் நிலை சீராக இருக் கும். பணியாளர்கள் பொறுமையாக இருக்க வேண்டும். மாணவர்கள் படிப்பில் சிறப்பார்கள். அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் அனுகூல மற்ற நிலைகளை சந்திக்க வேண்டிவரும். கவனமாக இருக்க வேண்டிய கால கட்டம். 24, 25 தேதிகள் புதிய முயற்சிகளுக்கு உகந்தவை. 26, 27 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.

## மிதுனம்:



ராசியாதிபதி புதன் கேந்திரத்தில், 5, 12 க்குடைய யோகாதிபதி சுக்கிரன் 5 இல் உடன் தைரிய வீரிய விஜயாதிபதி சூரியன், 6 மற்றும் 11 குடைய செவ்வாய் ராசியில், பாதகாதிபதி குரு ராசிக்கு 10 இல், அஷ்டம மற்றும் தர்மாதிபதி சனிபகவான் 8 இல், ராகு சுக்கிரன் சாரத்தில் 11 இல், கேது குருவின் சாரத்தில் 5 இல், குடும்ப, தொழில் நிலவரம் சுமாராக இருக்கும். பேச்சில் நிதானம், பொறுமை அவசியம். பிரயாணத்தில் கவனம் தேவை. சுப விரயங்கள் உண்டு. தாயார் உடல் நிலையில் சில தொந்தரவுகள் வரலாம். துணையின் வழியில் அனுகூலம் உண்டாகும். அரசு வழி பணிகள் விரைந்து நிறைவேறும். தந்தை வழி அனுகூலம் உண்டு. பிள்ளைகள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். கோயில், குல தெய்வ வழிபாடு, சிறு பயணங்கள் சிலருக்கு உண்டாகும். வியாபாரிகள் தொழில் விருத்தி, நல்ல லாபம் கிடைக்கப்பெறுவார்கள். மூத்த சகோதர வழியில் உதவியும், இளைய சகோதர வழியில் அனுகூலமற்ற நிலையும் இருக்கும். பூர்வீக சொத்து விவகாரங்களில் இழுபறி நிலை நீடிக்கும். திடீர் ஆடம்பர பொருட்களின் சேர்க்கை உண்டாகும். தன வரவு சீராக இருக்கும். அதற்கேற்ற செலவுகளும் உண்டாகும். சீருடை பணியாளர்கள், இன்ஜினியரிங் துறையை சார்ந்தவர்கள் சிறப்புறுவர். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கப்பெறுவர். பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலை சீராக இருக்கும். அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு ஆதாயம், நன்மை உண்டாகும். புதிய முயற்சிகளுக்கு 25, 26 தேதிகள் உகந்தவை. 27, 28 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.

## கடகம்:



4 இல் பாதகாதிபதி சுக்கிரன், தனாதிபதி சூரியன் 4 இல் 3, 12 க்குடைய புதன் புதன் மூன்றில், 4 இல் கேது குரு சாரத்தில், 7, 8 குடைய சனிபகவான் 7–இல், 6, 9–க்குடைய குரு 9 இல், ராகு பகவான் 10 இல் சுக்கிரன் சாரம். 12 இல் யோகாதிபதி செவ்வாய் மறைவு தொழில், வாக்கு, குடும்ப நிலை சிறப்புறும். பிள்ளைகளின் படிப்பில் தடை தாமதம் உண்டாகும். வண்டி வாகன சேர்க்கை, நவநாகரீக பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரிகள் கடன்களை வசூல் செய்ய சிரமப்படலாம். பெரிய அளவிலான கடன் விற்பனையை தவிர்ப் பது நல்லது. இளைய சகோதர வகையில் அனுகூலமான சூழ்நிலை நிலவும். ஆரோக்கியம் மேம்படும். தொழிலாளர்கள், பணியாளர்களின் வேலைப்பளு அதிகரிக்கும். உழைப்புக்கேற்ற ஆதாயமும் உண்டு. அரசு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் சாதகமாக முடியும். காண்ட்ராக்ட் தொழில் செய்வோர் நிலை உயரும். சீருடை பணியாளர்கள் நிலை மேம்படும். நாள்பட்ட உடல் உபாதைகளில் இருந்து சிலர் நிவாரணம் அடைவர். புனித யாத்திரை, தெய்வ வழிபாடு, திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். போக்குவரத்து துறை சேர்ந்தவர்கள் பயனடைவர். பணியாளர்களுக்கு எதிர்பாராத ஆதாயம், ஊதிய, பணி உயர்வு கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் மந்தநிலை, தடை உண்டாகும். அரசியல்வாதிகள் புதிய பதவி, எதிர்பார்த்த ஆதாயம் அடைவார்கள். புதிய முயற்சிகளுக்கு 28, 29 தேதிகள் அனுகூலமாகும். 18, 19 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

## சிம்மம்:



ராசியாதிபதி சூரியன் ராசிக்கு மூன்றில் உடன் மூன்றிக்குரிய சுக்கிரனுடன் கேது இணைவு, 3 இல் கேது பாதகாதிபதி குருவின் சாரம், 6 இல் 6, 7 குடைய சனி பகவான் 8 இல் பாதகாதிபதி குரு, 9 இல் பாதக ஸ்தானத்தில் ராகு சுக்கிரன் சாரத்தில், 11 இல் யோகாதிபதி செவ்வாய் தைரியம், உற்சாகம் கூடும். வண்டி, நிலம் வகையில் செலவுகள் உண்டாகும். சீருடை

பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். பிள்ளைகள் வழியில் சிறு மருத்துவ செலவுகள் உண்டாகலாம். நிம்மதி குறைவு இருக்கும். குடும்ப நிலவரம் சீராக செல்லும். வியாபாரிகளுக்கு தொழில் வகையில் சில விரைய செலவுகள் ஏற்படும். மூத்த சகோதர வழி உறவுகள் வீட்டிற்கு வருவார்கள். சிறு சுற்றுலா பயணங்கள், கேளிக்கை விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். நீண்டகால சுய விருப்பம் சம்பந்தப்பட்ட ஆசைகள் பூர்த்தியாகும். வீட்டில் உள்ள முதியோர், வயதானோர் நலனில் அக்கறை தேவை. தொழில், பணி சம்பந்தபட்ட விரைய செலவுகள் ஏற்படும். வயதானவர்கள், ஊனமுற்றோருக்கு உதவி செய்தல் நலம். புதிய மனிதர்களின் சந்திப்பு ஏற்படும். யாரையும் அவசர கோலத்தில் நம்ப கூடாது. மாணவர்கள் படிப்பில் சுணக்கம் ஏற்படும். அரசியல்வாதிகள் ஆதா யம் காண்பார்கள். 15, 16 தேதிகளில் புதிய முயற் சிகள் பலனளிக்கும். 20, 21 தேதிகளில் புதிய திட்டங்களை தள்ளிப்போடுவது நல்லது. வீண் விரயங்களை தவிர்க்க தாயார் அல்லது தாயாரின் வயதை ஒத்தவர்களுக்கு உதவி செய்யவும்.

## கன்னி:



ராசியில் ராசியாதிபதி புதன், இரண்டில் விரயாதிபதி சூரியன் உடன் தன மற்றும் தர்மாதிபதி சுக்கிரன் உடன் கேது குருவின் சாரத்தில், 5, 6–குடைய சனிபகவான் 5 இல், 7–இல் 4, 7 குடைய பாதகாதிபதி குரு பகவான். 8–இல் ராகு யோகாதிபதி சுக்கிரன் சாரத்தில், 3, 8 குடைய செவ்வாய் 10 இல், சிறப்பான காலம், மனமகிழ்ச்சி கூடும். தொழிலாளர்கள், பணி யாளர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். குடும்ப சூழல் கலவையாக இருக்கும். அவ்வப்போது டென்ஷன் உண்டாகும். காவல், ராணுவம், சீருடை பணியாளர்கள் நல்ல பலன்களை காண்பார்கள். தைரிய குறைவு, பயம் சிலருக்கு உண்டாகலாம். பொன், பொருள் சேர்க்கை சிலருக்கு உண்டாகும். குழந்தைகளால் தேவையற்ற தடைகள் உருவாகும். கணவன் மனைவி இடையே சுமூக நிலை நீடிக்கும். துணைவரின் மூத்த சகோதரரை சந்திப்பீர்கள். கடன் வாங்குவது, கொடுப்பதை சிறிது காலம் தவிர்க்கவும். நவநாகரீக, ஆடை ஆபரண சேர்க்கை சிலருக்கு தவணை முறையில் உண்டாகும். சுப விரையம் சுப செலவுகள் உண்டாகும். தந்தை வழி மூத்தோரால் நன்மை உண்டாகும். தந்தையின் நலனில் அக்கறை தேவை. நீண்ட கால திட்டங்கள், புது திட்டங்களை சிறிது காலம் தள்ளி வைக்கவும். இப்போது ஆரம்பித்தால் தடை, தாமதங்களை சந்திக்க நேரிடும். பணியாளர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள் நிலை சீராக செல்லும். அரசியல் மற்றும் கலைத்துறையை சேர்ந்தவர்கள் சிறப்படைவர். 14, 15 தேதிகளில் புதிய முயற்சிகள் பலனளிக்கும். 22, 23 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.

## துலாம்:



ராசியில் கேது குருவின் சாரத் தில், ராசியாதிபதி சுக்கிரன் ராசியில் உடன் லாபாதிபதி சூரியன். 4, 5 க்குரிய யோகாதிபதி சனி பகவான் 4 இல், 6 இல் 3, 6 குடைய குரு பகவான், 7 இல் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், 2, 7 குடைய செவ்வாய் 9 இல், 9, 12 குடைய புதன் 12 இல் ராசியாதிபதி தன் சொந்த மனையில் இருப்பதால் உற்சாகம் கூடும். மாத கடைசியில் குடும்பத்தில் விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறும். படபடப்பு டென்சன் சிறு சிறு வாக்கு வாதங்கள் துணைவருடன் ஏற்படும். அனுசரித்து செல்லவும். மனைவி வழி உறவினர்களின் வருகை ஏற்படும். உடல் உபாதைகளை அனுபவித்து வந்தவர்கள் நிவாரணம் காண்பார்கள். அலுவலகத்தில்உற்சாக மிகுதியில் மேலதிகாரிகளை பற்றி எதுவும்கருத்து கூறவேண்டாம். நிதானமாக இருந்தால்உரிய அங்கீகாரம், ஆதரவுகிடைக்கும். புதிய பொருட் களின் சேர்க்கை உண்டாகும். தொழிலாளர், பணி யாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்களில் தடை தாமதம் ஏற்படும். கோவில், புனித பயணம் மேற்கொள்வீர்கள். நிலம் அல்லது நீண்டகால முதலீடுகளை திட்ட மிடுவீர்கள். ஏற்கனவே செய்த முதலீடுகள் முதிர்ச்சி பெற்று இலாபம் கிடைக்கும். பழைய கட்டிடம் புனரமைப்பு செய்வீர்கள். தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. பிள்ளைகளின் படிப்பில் தடை தாமதம் ஏற்படும். துணைவருக்கு எதிர்பாராத பொருட்களின் சேர்க்கை உண்டாகும். அரசியல்வாதிகள் உற்சாகம் அடைவர். புதிய முயற்சிகளை 18, 19 தேதிகளில் திட்டமிடலாம். 15,16 தேதிகளை தவிர்க்கவும்.

## விருச்சிகம்:



ராசியாதிபதி செவ்வாய் ராசிக்கு 8 இல், 2, 5 குடைய குரு பகவான் 5 இல் இருந்து ராசியை பார்க்கிறார், 3, 4 குடைய சனிபகவான் 3 இல், 6 இல் ராகு பகவான் 7, 12 குடைய சுக்கிரன் சாரத் தில், 10 இல் யோகாதிபதி சந் திரன் அவரே பாதகாகிபதியும்

ஆகிறார். களத்திர மற்றும் விரயாதிபதி சுக்கிரன் 12 இல் உடன் 10 ஆம் அதிபதி சூரியன், 12இல் குருவின் சாரத்தில் கேது பகவான் நீண்டகால ஆசைகள், திட்டங்களை செயல்படுத்த நேரம் கூடிவரும். தொழில்,வருமானம் சீராக இருக்கும். அவ்வப்போது கோவம் தலைதூக்கும். பொறுமை காப்பது அவசியம். சிறுதூர பயணங்கள் உண்டாகும். சீருடைப்பணியாளர்கள், காவல் துறையை சேர்ந்தவர்கள் தற்காலிக இடமாற்றத்தை சந்திப்பார்கள். துணைவரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய வீடு, நிலம் வாங்க சிலர் திட்டமிடுவீர்கள். ஏற்கனவே உள்ள வீட்டை புனரமைக்க செலவு செய்வீர்கள். தந்தையின் நலனின் அக்கறை தேவைப்படும். பணியாளர்கள் தொழிலாளர்கள் நிலை சீராக இருக்கும். வியாபாரிகள் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். எதிர்பார்த்த கடன்கள் வசூலாகும். புதிய வியாபார கூட்டாளிகள், வாடிக்கையாளர்களை பெறுவீர்கள்.தன வரவுக்கு குறையிருக்காது. அரசியல்வாதிகள் சிக்கலை சந்திப்பார்கள். சிலருக்கு வாத சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படும். தூக்கம் குறையலாம். அலைச்சல் உண்டாகும். சிலர் தற்காலிக காரணங்களால் துணைவரை பிரிந்து இருக்க நேரிடும். இளைய சகோதரம் அல்லது மைத்துனரை நிலம், பூமி சம்பந்தப்பட்ட காரணங்களுக்காக சந்திப்பீர்கள். 17, 18 தேதிகளில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். 26, 27 தேதிகளில் புதிய திட்டங்களை தவிர்க்கவும்.

## தனுசு:



ராசிக்கு கேந்திரத்தில் ராசியாதிபதி குரு தன் சுய வீட்டில், இரண்டில் 2,3 க்குரிய சனி பகவான், 5 இல் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், 7 இல் 5 மற்றும் 12 கூறிய செவ்வாய், 11 இல் 6, 11 க்குரிய சுக்கிரன் உடன் யோகாதிபதி சூரியன் உடன் கேது குருவின் சாரத்தில், 10 இல் பாதகாதிபதி உச்ச புதன் ரூ தொழில் வருமானம் குடும்ப நிலை சுமாராக இருக்கும். வேலையில் பணியாளர்கள் அனாவசிய தொல்லைகள், டென்ஷனை சந்திப்பார்கள் பொறுமையாக பணியாற்றவேண்டும். தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. தாயாரின் ஆரோக்கியம் சீராக இருக்கும். மூத்த சகோதரத்தால் ஆதாயம், பொருளுதவிகளை எதிர்பார்க்கலாம். தொழிலாளர்கள் எதிர்பார்க்கும் தனவரவு கிடைக்கும். சிலர் பழைய வீடு வாங்கி கிரஹப்பிரவேசம் செய்வார்கள். புனித யாத்திரை, குல தெய்வ வழிபாடு மேற்கொள்வீர்கள். சீருடை பணியாளர்கள் எதிர்பார்த்த ஆதாயம் அடைவார்கள். வியாபாரிகள் திடீர் ஆதாயம் அடைவர். அரசியல்வாதிகள் எதிர்பாக்கும் பதவி, பலன்கள் கிடைக்கும். மாணவர்கள் கவனம் சிதறாமல் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். துணைவருடன் வாக்கு வாதங்களை தவிர்க்கவும். சிலர் பழைய வண்டி வாகனங்களை விலைக்கு வாங்குவார்கள். வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும். வேலை தேடும் இளைஞர்களுக்கு உரிய வேலை கிடைக்கும். புதிய ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். 21, 22 தேதிகள் புதிய திட்டங்களுக்கு உகந்தவை. 18, 19 தேதிகளில் புதிய திட்டங்களை தவிர்க்கவும்.

## மகரம்:



ராசியாதிபதி சனி ராசியில், ஜென்ம சனி. 12, 3 குடைய குரு 3 இல், 4 இல் சுக்கிரன் சாரம் பெற்ற ராகு பகவான். 4, 11குடைய செவ்வாய் 6 இல், 8 இல் சந்திரன், 10 இல் 5, 10 க்குரிய யோகாதிபதி சுக்கிரன், 9 இல் 6, 9 க்குரிய புதன். 8 ஆம் அதிபதி சூரியன் 10 இல் உடன் கேது குருவின் சாரத்தில் தொழில், குடும்ப சூழ்நிலை சீராக இருக்கும். காரியங்களில் தடை, தடங்கல், தாமதங்கள் நீடிக்கும் எனினும் உற்சாகமாக செயல்படுவீர்கள். தூக்கம் தடைபடும். இளைய சகோதரருடன் மனஸ்தாபம் உண்டாகலாம். தாயார், மனைவியின் நலனில் அக்கறை தேவை. திடீர் அதிர்ஷ்டம், எதிர்பாராத தன வரவு உண்டாகும். புனித பயணங்கள் உண்டு. துணையின் மூலம் ஆதாயம், பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபாடு, உதவிகள் செய்வீர்கள். நீண்டகால சேமிப்புகள் சுப செலவுகளுக்கு உதவும். பிள்ளைகள் பொறுப்பின்றி நடந்து கொள்வார்கள். வரும் காலங்களில் நிலைமை சரியாகும். மனைவி வழி உறவு வகையில் சில அனுகூலமற்ற செய்திகள் உண்டாகும். இன்சூரன்ஸ், வைப்பு நிதி முதலீடுகள் முதிர்ச்சி பெற்று பலன் கைக்கு வரும். மூத்த சகோதரரை சந்திப்பீர்கள். வீடு,நிலம் பூர்வீக சொத்துக்கள் சிலருக்கு கிடைக்கும். பணியிடத்தில் மேலதிகாரிகளால் சிக்கல், தொல்லைகளை சந்திப்பீர்கள். பணியாளர்கள், தொழிலாளர்கள் பணியிடத்தில் பொறுமையுடன் செயல்படவேண்டும். அரசியல்வாதிகள் பெண்கள் வகையில் பிரச்சனைகளை சந்திப்பார்கள். வண்டி, வாகன சேர்க்கை சிலருக்கு உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை.சனிபகவான் வழிபாடு நிம்மதிக்கு வழி வகுக்கும். 18, 19 தேதிகளில்

புதிய முயற்சிகளில் தவிர்த்து 21, 22 தேதிகளில் திட்டமிடவும்.

## கும்பம்:



ராசியாதிபதி சனிபகவான் ராசிக்கு 12 இல் ஏழரை சனி நடப்பில் உள்ளது. 11, 2 குடைய இலாப மற்றும் தன காரகன் குரு பகவான் 2 இல். 3 இல் ராகு பாதக மற்றும் யோகாதிபதி சுக்கிரன் சாரத்தில், 5 இல் 3, 10க்குரிய செவ்வாய், 7 இல் சந்திரன், 9 இல் 4, 9 ஆம் அதிபதியும் யோகாதிபதியான சுக்கிரன் உடன் சூரியன் மற்றும் கேது குருவின் சாரத்தில் 8 இல் 5, 8 குடைய புதன் ராசிக்கு விரய ஸ்தானத்தில் ராசியாதி இருப்பதால் புதிய முயற்சிகள், திட்டங்கள் எதையும் ஜனவரி 23 வரை தள்ளிப்போடவும். அனாவசிய கடன்கள் வாங்குவதையும் கொடுப்பதையும் தவிர்க்கவும். கடன் கொடுத்தால் திரும்ப வராது. வாங்கிய கடனை அடைக்க சிரமப்படுவீர்கள். தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும். பொறுமை மற்றும் நிதானத்துடன் கடக்க வேண்டிய காலகட்டம். துணையின் நலனில் அக்கறை கொள்ளவும். நாள்பட்ட உபாதைகள் தொந்தரவு செய்யும். சனீஸ்வரர், ஆஞ்சநேயரை பற்றிக்கொள்ளவும். ராமநாம பாராயணம் நலம் தரும். பணியாளர்கள், தொழிலாளர்கள் மேலதிகாரிகள், முதலாளிகளிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். வியாபாரிகள் கடன் விற்பனைகளை கண்டிப்பாக தவிர்க்கவும். மூத்த சகோதரர் அல்லது மனைவி வழி சித்தி போன்ற உறவுமுறைகளின் வகையில் அனுகூல மற்ற செய்திகள் வரக்கூடிய வாய்ப்புகள் உண்டு. இளைய சகோதரரிடமிருந்து எதிர்பாராத உதவி கள் கிடைக்கும். தாயார் மற்றும் மனைவி வழி தம்பி முறைகளில் உள்ளவர்கள் முன்னேற்றம் காண்பர் அவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் படிப்பில் ஈடுபாடு குறையும். புதன், சுக்கிர வழிபாடு சுகமளிக்கும். அரசியல்வாதிகள் பிரச்சினைகள் இருந்தபோதிலும் ஆதாயம் காண் பர். புதிய முயற்சிகளுக்கு 25, 26 தேதிகள் சிறப்பு. 18, 19 தேதிகளை தவிக்கவும்.

## மீனம்:



ராசியாதிபதி குருராசியில், இரண்டில் 3, 8குடைய சுக்கி ரன் சாரம் பெற்ற ராகு. 4 இல் 2, 9 குடைய செவ்வாய், 5 இல் யோகாதிபதி சந்திரன், 8 இல் 3, 8 குடைய சுக்கிரன், 7 இல் 4, 7 குடைய பாதகாதிபதி புதன், 6 குடைய சூரியன் 9 இல் உடன் குருவின் சாரம் பெற்ற கேது நிம்மதி, மகிழ்ச்சி கூடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி, பெருமை கௌரவம் கூடும். படிப்பில் சிறந்து விளங்குவார்கள். வெளியூரில் படிக்க முயற்சிசெய்வோருக்கு வேண்டிய படிப்பில் சேர்வார்கள். துணையின் வழியில் உதவி, ஆதாயம் ஆதரவு உண்டு. நீண்டகால திட்டங் கள் நிறைவேற காலம் கூடிவரும். சிலர் பூமி, மனை போன்ற நீண்டகால முதலீடுகளைமேற் கொள்வர். கடன் வாங்கி பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். தொழிலாளர்கள்,பணியாளர்கள் நிலை சீராகும். வேண்டிய பண உதவிகள், வியா பாரிகளுக்கு வாராக்கடன்கள் வசூலாகும். அரசியல்வாதிகள் அனுகூலமற்ற நிகழ்வுகளை எதிர்கொள்வார்கள். சிலர் பழைய வீடு, வாகனங் களை சொந்த பயன்பாட்டுக்கு வாங்குவீர்கள். அல்லது கார்பொரேஷன், குப்பை கிடங்கு, மருத்துவ மனையை ஒட்டிய பகுதிகளில் புதிய வீடு, நிலம் வாங்கலாம். சுப விரய, சுப நிகழ்ச்சிகளுக்காக செலவுகள் உண்டாகும். திடீர் எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும். சிலர் குடும்பத்துடன் நீண்டதூர சுற்றுலா பயணங்கள் மேற்கொள்வீர்கள். மூத்த சகோதர வழியில் ஆதாயம், உதவிகள் உண்டாகும். நீண்டகால முதலீடுகள் செய்வீர்கள். 18 ,19 தேதிகள் நலம் தரும். 23, 24 தேதிகளை புதிய முயற்சிகளுக்கு தவிர்க்கவும்.


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# விருப்பபடி வழிபாடுகளை அமைத்து கொண்டால் முக்தி நிலை சாத்தியப்படும்

**கடவுள் உருவாக்கிய மதம்**

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு மூச்சு காற்று முக்கியமானது. அந்த மனிதன் நல்ல வளர்ச்சியை பெறு வதற்கு சிந்தனை என்பது மிகவும் முக்கியமானது அதுவும் தடையில்லாத தடைபடுத்த முடியாத சிந்தனை சுதந்திரம் என்பது அத்தியாவசியமானது ஆகும். உலகத்தில் இதுவரை நிகழ்த்தப்பட்ட சாதனைகள் எல்லாமே சுதந்திர சிந்தனையால் தான் உருவானது நமது இந்துமத பெரியவர்கள் இந்த உண்மையை மிக தெளி வாக உணர்ந்து இந்துக்கள்அனைவ ருக்கும் சிந்தனை செய்யும் அதிகாரத்தை தெளிவாகவே வழங்கி யுள்ளார்கள். உலகில் எந்த மதத்திலும் இல்லாத சுதந்திரம் நமது இந்துமதத்தில் இருப்ப தற்கு நமது பெரியவர்களின் விசாலமான மனதே முக்கிய காரணம்.




பொதுவாக இந்து மதத்திலேயே சுதந்திரம் என்பது வெகுவாக போற்றி பாதுகாக்க பட்டாலும் வைஷ்ணவ மரபில் மனித சிந் தனை சுதந்திரத்திற்கு தடைகள் என்பதே கிடையாது என்று சொல்லலாம். காரணம் ஒரு மனிதன் இறைநிலையை அடைவதற்கு அவனது விருப்பபடி வழிபாடுகளை அமைத்து கொண்டால் தான் முக்தி நிலை என்பது சாத்தியப்படும் இதனால் தான் உலகத்தை படைத்த முழுமுதற் கடவுளை காதல் நாயக னாகவும் இட்டபணி செய்கின்ற சேவகனாகவும் வழிபடும் சுதந்தி ரம் கொடுக்கபட்டிருக்கிறது.

வைஷ்ணவ சுதந்திரத்தின் உச்சமான நிலையாக வடகலை, தென்கலை என்ற இருபெரும் பிரி விகள் தோன்றி வைஷ்ணவ மரபை இன்றுவரை செழுமை படுத்தி வருகிறது.

14 ம் நூற்றாண்டளவில் வைஷ்ணவ நெறியில் வடகலை,தென்கலை என்ற அகச்சமைய பிரிவுகள் தோன்றின என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள் புகழ்வாய்ந்த தென்கலை நெறியை பிள்ளை லோகசாரியரும்,மணவாள மாமுனிகளும் உருவாக்கினார்கள் வடகலை







மரபினை வேதாந்த தேசிகர் தோற்றுவித்தார். தென்கலையை பின்பற்றுபவர்கள் ஆழ்வார் களால் உருவாக்கப்பட்ட நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தை தங்களது வழிகாட்டும் நூலாகவும் வடகலையை பின்பற்றுபவர்கள் வேதங்கள், உபநிஷதங்கள்,பகவத் கீதை ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்த பிரஸ்தானந்திரத்தை வழிகாட் டும் புனித நூல்களாக கொள்கிறார்கள். ஆனாலும் நாலாயிரம் திவ்வியபிரபந்தத்தை இவர்கள் ஒதுக்கிவிடவில்லை.

வடகலை,தென்கலை ஆகிய பிரிவினர்களுக்கு இடையில் வழிபாட்டு முறையில் சில சண்டை சச்சரவுகள் தொன்று தொட்டு நடந்து வருகி றது என்றாலும் உண்மையில் அந்த இரு மரபு களுக்கு இடையில் ஆரோக்கியமான தத்துவ பேதங்கள் இருக்கிறதே தவிர உயர்வு தாழ்வு என்ற பிரச்சனையே கிடையாது ஆனால் துர திஷ்டவசமாக இரு மரபினர் மத்தியில் இன்று ஏற்ற தாழ்வு சண்டைகள் நடந்து வருகிறது. அவைகளை பற்றி விரிவாக பேச வேண்டிய இடம் இது இல்லை என்றாலும் அப்படி ஒரு தகராறு வைஷ்ணவ மரபில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட வேண்டியாது நமது கடமையாகும்.

தென்கலையை சேர்ந்தவர்கள் காதலாகி கசிந்துருகும் பக்தியால் மட்டும் பரம்பொருளை அடைந்து விட கூடாது பக்தியை விட பிரபக்தியை தனிச்சிறப்பு வாய்ந்தது அந்த பிரபக்தியை மேற்கொண்டே பகவானின் பாதார விந்தங்களை அடைய வேண்டும் என்கிறார்கள் பிரபக்தி என்றால் என்ன என்ற கேள்வி உங்களுக்கு எழக்கூடும். பகவானின் திருவடி தாமரை நிழலுக்காக தன் உடல், பொருள், ஆவி அனைத்தும் பகவான் இடத்திலேயே முழுவதுமாக அற்பணித்து அவனே கதி என்று சரண்புகுதலே பிரபக்தி யாகும் கீதை சொல்லுகின்ற சரணாகதி தத்துவம் தான் தென்கலை மரபின் தலைசிறந்த கொள்கையாகும்.

வடகலை மரபினர் சரணாகதி என்ற பிர பக்தியை வேண்டாம் என்று புறம்தள்ள வில்லை அதே நேரம் பக்தி என்பதையும் கூட்டாக வைத்து கொண்டால் தவறில்லை என்று சொல்கிறார்கள். அதற்காக அவர்கள் மர்க்கட நியாயம் என்ற ஒன்றை உதாரணமாக காட்டுகிறார்கள் அதாவது மர்க்கட என்றால் குரங்கு என்று அர்த்தம் குரங்கு குட்டியாக இருக்கும் போது எப்படி தாய் குரங்கை விடாமல் பிடித்து கொள்ளுமோ அப்படியே பகவானை பக்தர்கள் விடாப்பிடியாக பிடித்து கொள்ள வேண்டும். தாயை பிடித்து கொள்வது என்பது சேயின் பிரயத்தனம் முயற்சி என்பதாகும் முயற்சியே இல்லாமல் எதுவும் நடைபெறாது என்பது வடகலை பிரிவின் துணிச்சலான முடிவு.

இந்த மர்க்கட நியாயத்தை தென்கலைமரபினர் ஏற்றுக்கொள்வது இல்லை ஒரு பூனைக்குட்டி தன்னை முழுமையாக தாயிடம் ஒப்படைத்து விடுகிறது தாய் பூனை குட்டியை ஒருவேளை பரண் மீது வைக்கிறது மறுவேளை பானைகளுக்கு இடையில் கொண்டு வைக்கிறது. இந்த இடம் சரியா? சௌகரியமானதா? என்று குட்டி கவலைபடுவது இல்லை அம்மாவுக்கு எல்லாம் தெரியும் அவள் என்னை அபாயத்தில் கொண்டு நிறுத்திவிட மாட்டாள் என்ற நம்பிக்கையில் நிம்மதியாக இருக்கிறது. இதே போலவே பக்தனும் பகவானிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து விட வேண்டும். அவன் என்னை சிம்மாசனத்தின் மீது வைத்தாலும் சரி சாக்கடையில் தள்ளினாலும் சரி எல்லாம் எனது நன்மைக்காக அவன் நடத்துவது என்று நிம்மதி யாக இருக்க வேண்டும். இதற்கு மார்ச்சால நியாயம் என்று பெயர்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 09442426434

# குடும்ப ஒற்றுமையையும், தமிழர்களின் பண்பாட்டையும் பறைசாற்றும்

# கன்னி தெய்வ வழிபாடு

ஒரு பெண் இந்த உலகில் தோன்றி மனம் முடிக்காமல் கன்னியாக மறைந்தால் அவளை வழிபடும் பண்பாடு நம் கிராமங்களில் தொடர்ந்து வருகிறது.

பெண்களை தெய்வமாக வழிபடும் வழக்கம் நமது பாரத தேசத்தில் பழங்காலத்தில் இருந்தே தொன்று தொட்டு நடந்து வருகிறது. சக்தி வழி பாடு என்பது தாய்வழி வழிபாடு தான்.

ரிக் வேதத்திலும் மார்க்கண்டேய புராணத் திலும், காளிதாசரின் குமார சம்பவத்திலும், விஷ்ணு தர்மோத்தர புராணத்திலும், தேவி பாக வதத்திலும் கன்னிமார்களின் வரலாறு போற்றப்படுகிறது.

மிக பிரபலமாக கன்னி தெய்வங்கள் போற்றப்படுவதற்கு பல காரணங்கள் உண்டு.

இன்பத்தை கருவாக்கினாள் பெண். உயிருக்குள் உயிர் சுமந்து மனித குலத்தை விருத்தி அடையச் செய்தவளும்பெண்தான்.இந்த காரணத்தினாலேயே பெண் ணை மகா சக்தியாகப் பார்த் திருக்கிறான் ஆதிமனிதன்.

தன்னைவிட பலம்குன்றிய வர்களாக இருந்தாலும், பெண்ணைப் பார்த்து பயந் திருக்கிறான். அவளைக்கை யெடுத்துக் கும்பிட்டிருக்கி றான்.

அந்தப் பழங் கால மரபுக்கும் வர லாறுக்கும் இன்றும் நிலவும் சான்று தான் தமிழர்களின் கன்னி வழிபாடு.

ஒரு பெண் இந்த உலகில் தோன்றி மனம் முடிக்காமல் கன்னியாக மறைந்தால் அவளை வழிபடும் பண்பாடு நம் கிராமங்களில் தொடர்ந்து வருகிறது. இந்தக் கன்னிகள் பெரும்பாலும் தங்களின் சராசரி வாழ்வைத் தவற விட்டவர்கள்.

அல்லது துச்சமாகத் தூக்கியெறிந்தவர்கள்.

கன்னித்தன்மையைக் கொடுத்து தாய் மையைப் பரிசாகப் பெறாமலேயே இறந்தவர்கள்.

இதனாலேயே சராசரி பெண்கள் ரட்சிக்கும் தெய்வ நிலைக்கு உயர்ந்து விடுகிறார்கள்.

சுமங்கலிகள் கன்னி தெய்வங்களை வழிபட் டால் மாங்கல்ய பலம் அதிகரிக்கும்.



கன்னிப்பெண்களுக்கு விரைவில் திருமணம் யோகம் கைகூடும்என்று பொதுவான நம்பிக்கை இருப்ப தாலே கன்னியை வணங்கும் வழக்கம் கிராமத்தில் துவங்கி பட்டணம் வரை தொடர்ந்து வருகிறது.

இந்த தெய்வங்களுக்கு ஆடி மற்றும் தை மாதங்களில் சிறப்பான பூஜைகள் செய்வது வழக்கம். பெரும்பாலும் செவ் வாய்கிழமை தான் கன்னிக்கு ஏற்ற நாள்.

எனவே அந்த நாளில் வணங்குவதை பலர் கடை பிடித்து வருகின்றனர்.

மேற்கண்ட மாதங்களில் வணங்க முடியாதவர்கள் தைமாதம் இரண்டாம் நாளில் கன்னிக்கு பூஜை வைத்து வணங்கு வார்கள்.

தங்கள் குல தெய்வத்தினை பங்குனி உத்திரத் தில் வணங்கும் போது கூட மறவா மல் வீட்டில்உள்ள கன்னிகளை யும்

வணங்கும் வழக்கம் நம் நாட்டில் காணப்படுகிறது.

பொதுவாக ஒரு வீட்டின் திசைகளைக் கன்னி மூலை, அக்னி மூலை, வாயு மூலை, ஈசான மூலை என பிரித்துக் கூறுவதுண்டு.

அதில், வடகிழக்கு மூலை இறைவனுக்குரிய ஈசான மூலை என்றால், தென்மேற்கு மூலை கன்னி தெய்வத்துக்குரிய கன்னி மூலை என தனி மூலை இருப்பதே... கன்னி வழிபாட்டின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் விதமாக உள்ளது.

பெரும்பாலும் இறைவழிபாட்டுக்கு இணை யான வழிபாடாக கன்னி தெய்வ வழிபாடுகள் போற்றப்படுகின்றன.

தமிழர் குடும்பங்களில் நோயாலோ, விபத் தாலோ மடிந்து விட்ட கன்னியரை தெய்வமாகக் கருதி வணங்குகின்றனர். குடும்ப ஒற்றுமைக்கு கன்னிதெய்வ வழிபாடு முக்கிய பங்கு வகிக்கி றது. குடும்பத்தில் பலருக்கு மனஸ்தாபம் இருந் தாலும் கூட கன்னியை வணங்க அனைவரும் கூடிவிட வேண்டும். இது குடும்பத்தில் எழுதப் படாத சட்டமாகும். ஏன் என்றால் குடும்ப ஒற்றுமைதான் கன்னிக்கு மிக பிடிக்கும்.

அனைவரும் குடும்பத்தோடு நின்று வணங்கி னால் கன்னி மனம் குளிர்ந்துவிடும். இறந்த பெண் வயதுக்கு ஏற்ப அவர்களுக்கு உடை எடுத்து வைப்பார்கள்.

சிறுமிகளுக்கு அதற்கேற்ற ஆடைகளும், இளம் பெண்ணுக்கு பாவாடை சட்டை தாவணியும், அதை விட பெரிய பெண்ணுக்கு சேலை சட்டையும் வாங்கி வைத்து வணங்குவார்கள்.

அந்திக் கருக்கலில் கன்னியை வணங்க துவங்குகிறார்கள். இளநார்பெட்டி ஒன்றில் மஞ்சள் கிழங்கு, சிற்றாடை அல்லது சேலை, கண்ணாடி, சீப்பு, வளையல் வைத்து, பிச் சிப்பூ அல்லது மரிக்கொழுந்து படைத்து, சாம்பி ராணி மணத்தை வீடு முழுவதும் நிரப்பி, முற்றத்தில் நீர் தெளித்து கன்னியை வரவேற்று வழிபடுகிறார்கள்.

இந்த நார்ப்பெட்டிக்கு கன்னிப்பெட்டி என்று பெயர். கன்னிப்பெட்டியை வைக்கும்போது அந்தக் குடும்பத்தில் உள்ள பூப்படைந்த பெண் ணுக்கு அருள் வந்து மூச்சிரைக்கும். அவரிடம் தங்களது குறைகளை முறையிட்டு தீர்க்குமாறு குடும்பத்தினர் வேண்டுவர்.

தன்னை மறக்காமல் வழிபட்டால் துயரத்தைப் போக்கி குடும்பத்தை தழைத்தோங்கச்செய்வ தாக அவரிடமிருந்து அருள்வாக்கு கும்பிடு



பவர்களுக்கு கிடைக்கும்.

பின்னர் கன்னி மூலையில் உயரமான இடத் தில் இளநார்பெட்டியை வைத்து விடுவார்கள்.

முதலாண்டு வைத்து படைத்த கன்னிப் பெட்டியை மறு ஆண்டுதான் எடுப்பார்கள்.

கன்னி பெட்டியை அதிகாலையில் எடுக்கும் போது வீட்டை சுத்தம் செய்வார்கள். கன்னிப் பெட்டியைத் திறக்கும் போது, அதில் கடந்த ஆண்டு வைத்த மஞ்சள் முளை விட்டிருந்தால், கன்னி தெய்வம் துடியாக இருப்பதாக நம்பிக்கை.

அதற்குள் வைத்திருந்த துணியை குடும் பத்தில் உள்ள பெண்ணுக்கு உடுத்தக் கொடுப் பார்கள்.

இந்தக் கன்னிப் பொங்கல் தமிழகத்தின் பல பகுதிகளில் அவரவர்கள் பாணிக்கு ஏற்ப கொண்டாடப்பட்டு வருகிறது.

துணியை தனது வீட்டில் மணமாகாத பெண்ணுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும்.

அவர்கள் திருமணம் முடித்து சென்று விட்டால் வேறு வீட்டு பெண். எனவே அவர்களுக்கு கன்னிக்கும்பிட்ட துணி கிடைக்காது.

வீட்டுக்கு வந்த மருமகளுக்கு கன்னிக்கு வணங்கிய துணியை கொடுக்கலாம்.

ஏன் என்றால் அவர் அந்த குடும்பத்தின் பெண். தனது பொருள் கூட தனது குடும்பத்தில் வசிக்கும் ஒருவருக்கே கிடைக்க வேண்டும் என்று கன்னி தெய்வங்களின் எழுதப்படாத சட்டம்.

இன்றைய நவீனயுகத்தில் ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் பொருள் தேட திரைகடல்



தாண்டி தேடி ஓடி விடுகிறார்கள். எப்போதாவது கல்யாணம், கோயில் கொடை என்றால் கூட அவர்கள் ஒன்று சேருவது கடினம்.

ஆனால் கன்னி தெய்வம் குடும்ப உறுப்பி னர்களை ஒன்று சேர்க்கும் வழிபாடாகும்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்துதான் படையல் தயார் செய்யவேண்டும்.

பனியாரம், அதிரசம் என இனிப்பு பலகாரம் கன்னிகளுக்கு மிகவும் பிடிக்கும். எனவே படையலில் நிச்சயம் பனியாரம், அதிரசம் என இனிப்பு வகைகள் கண்டிப்பாக இடம்பெறும்.

அதன் பின் வடை பாயாசத்துடன் அனைவரும் ஒரே நேரத்தில் அமர்ந்து சாப்பிடுவார்கள்.

குடும்ப தலைவி அனைவருக்கும் பரிமாறி விட்டு தானும் ஒரு இடத்தில் இலையை போட்டு அனைவருடன் அமர்ந்து சாப்பிடுவார்கள்.

இந்த சமபந்தி விருந்து கன்னி வழிபாட்டில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த வழி பாட்டிற்காகவே வருடத்துக்கு ஒரு முறை குடும் பத்தினரை ஒன்று சேர்த்து விடுகிறாள்.

உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் உறவை தேடி ஓடி வருகிறார்கள். பெரும்பாலுமே ஒரு பெண்ணுக்கு எப்போதுமே தான் பிறந்த வீட்டின் மீது பற்று உண்டு.

இதுபோன்ற கன்னிகளுக்கும் அதுபோல்தான் ஆசை. தன் வீட்டில் அண்ணன் தம்பி என்று உறவு முறைகள் அனைவரும் ஒன்றாக நின்று தம்மை வணங்க வேண்டும் என ஆசைபடுவாள்.

அப்படி வணங்கும் போது மனம் குளிர்ந்து அவர்களுக்கு வேண்டும் வரம் கொடுப்பார்.

இப்போது பல மாநிலங்களில் வசிப்பவர்கள், தங்கள் இடத்துக்கே கன்னியை கொண்டு சென்று வைத்து வணங்கி வருகிறார்கள்.

பெரும்பாலுமே ஒரு கன்னி ஒரு வீட்டில் துடியாக இருக்கிறார் என்றால் அவ்வீட்டில் செய் வினை கோளாறு நீங்கி விடும். பேய் பிசாசு அண்டாது. நோய் நொடிகள் தீர்ந்து விடும்.

பிறந்த குழந்தை திடீர் திடீரென அழுதால் கூட கன்னிக்கு பூஜை வைக்கவில்லை என்று கன்னி பயங்காட்டுகிறது என கிராமத்தில் பெரி யவர்கள் சொல்லுவதை தற்போதும் காணலாம்.

கன்னி தன் தேவைகளை குழந்தை மூலமாக பூர்த்தி செய்து கொள்கிறது. குழந்தைகளுக்கு கல்வி செல்வம் கிடைக்கவும் கன்னியை வணங் கும் வழக்கம் உள்ளது.

ஒருவர் தனது வீட்டில் கன்னியை வணங்கினால் அவர் வேறு எந்த தெய்வத்தினையும் தேடிப்போய் வணங்க வேண்டிய அவசியம் இல்லை என்பது பெரியோரின் கருத்து. கன்னிகளில் கதை பலவாறாக பேசப்பட்டு வருகிறது. அதில் பல கதை மனதை உருக்குவதாகவே உள்ளது.

ஒரு குடும்பத்தில் தாய்க்கு தலைமகளாய் இருந்த சிறுமி ஒருவர் இறந்து விட்டாள். வருடம் தோறும் இறந்த அந்த பெண்ணுக்கு பாவடை சட்டை எடுத்து வைத்து கும்பிடுவதை வழக்க மாக கொண்டிருந்தார்கள். 23 வருடங்கள் கழிந்தது. ஒரு நாள் அந்த பெண் தாயின் கனவில் தோன்றி, 'தாயே.. எனக்கு 23 வயதாகி விட்டது.. இன்னும் எனக்கு பாவடை சட்டைதானா... போத வில்லையே' என கண்ணீர் மல்க கேட்க அந்த ஆண்டு முதல் அவளுக்கு சேலை சட்டை வாங்கி வைத்து வணங்க ஆரம்பித்தனர்.

அந்த அளவுக்கு கன்னிதெய்வம் குடும்பத் தில் ஒரு உறுப்பினராக மறைந்து வாழும் குழந் தையாகவே வணங்கப்படுகிறது.

ஒரு வீட்டில் கன்னி தெய்வத்தினை வணங் கவே மறந்து விட்டனர். அவ்வீட்டில் பிறந்த குழந்தை தினமும் இரவு பயந்து அழுது கொண்டே இருந்தது.

ஒரு நாள் வைத்தியர் ஒருவர் உங்கள் கன்னி தெய்வத்தை வணங்குங்கள் எல்லாம் சரியாகி விடும் என கூற, கன்னியை வணங்கி கன்னிமூலையில் குழந்தையை கிடத்தி எடுத்த பிறகு அழுகை நின்று விட்டதாம்.

இதுபோல் கன்னி தெய்வங்கள் இந்த நவீன யுகத்திலும் பிரதான தெய்வமாக விளங்கி வருகிறது. பல அற்புதங்களையும் அதிசயங் களையும் செய்து கொண்டிருக்கிறது.

நவீன யுகத்தில் கன்னி நார் பெட்டி மட்டும் தாயரிக்கும் பணி நடந்து வருகிறது. பல கிராமங்களில் பல வீடுகளில் இந்த நார் பெட்டி பல வண்ணத்தில் தொங்கி கொண்டிருப்பதை நாம் இப்போதும் காணலாம்.

பழமையை பறைசாற்றும் இந்த வழிபாடு, பல வரலாறுகளை சுமந்து கொண்டு தமிழரின் பண்பாட்டை இன்றும் பறைசாற்றிக் கொண்டு தான் இருக்கிறது.

# இறப்பின்போதுகூட சூட்சும, காரண தேகங்களுக்குள் நாம் அடைப்பட்டுள்ளோம்

அன்பு குருதேவர் அருளுகிறார்: "நீங்கள் இறக்கும்போது 16 மூல வஸ்துக்களைக்கொண்ட ஸ்தூல உடல் சிதைந்துவிடுகின்றது; ஆனால் உங்களுடைய சூட்சும சரீரத்தின் 19 மூல வஸ்துக்களும் முழுமையாகவே உள்ளன. அப்படியானால் இப்பூவுலகைவிட்டுச் சென்றுவிட்ட உயிர்கள் அனைத்தும் எங்கே உள்ளன? அவை ஆகாய வெளியில் அலைந்துகொண்டிருக்கின்றன. "அது சாத்தியமில்லை" என நீங்கள் கூறுகின்றீர்கள். எனவே ஓர் ஒப்பீட்டை நாம் செய்வோம். பழங்குடி ஆதிவாசி ஒருவன் இங்கு வர, அவனிடம் நான் ஆகாயத்தில் சங்கீதம் கேட்கலாம் எனக் கூறினால், அவன் என்னைப்பார்த்து சிரிப்பான். அல்லது ஒருவேளை பயந்தும் போகலாம்; ஆனால், நான் ஒரு வானொலிப் பெட்டியைத் கொண்டுவந்து அதை, சங்கீதம் இசைத்துக்கொண்டிருக்கும் ஒரு நிலையத்துடன் இசைவுறுத்தினால், எனது கூற்றின் உண்மையை அதற்குப் பின்னரும் அதை மறுக்க முடியாது. இதே மாதிரியாக, இப்பொழுதே சூட்சும படைப்புகள் ஆகாயத்தில் அலைந்தவண்ணம் உள்ளன என்பதை நான் உங்களுக்குக் காட்ட முடியும்; அதை நீங்கள் மறுக்கவும் முடியாது. சூட்சும உலகம் இங்கேயே இப்பௌதீகப் பிரபஞ்சத்தின் ஸ்தூல அதிர்வுக்குப் பின்னாலேயே உள்ளது."

"இந்த நொடியில் உங்களைச் சுற்றியுள்ள பெருந்தொகையான சூட்சும வாசிகளை உங்களால் காண முடியுமானால், உங்களில் அனேகர் பயந்து விடுவீர்கள்; அத்துடன் உங்களில் சிலர் உங்களைவிட்டுப் பிரிந்துவிட்ட பிரியமானவர்களை அவர்கள் மத்தியில் தேட முயல்வீர்கள். நீங்கள் ஆன்மீகக் கண்ணில் ஆழ்ந்து ஒருமுகப்பட்டால், சூட்சும தளத்திற்குச் சென்றுவிட்ட அனைத்து ஆன்மாக்களும் வாழ்ந்துகொண்டிருக்கும் அந்த ஒளிமயமான உலகத்தை உங்களுடைய

**141**
**பாகம்**
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
**மனித வாழ்வு மேம்படுவதற்காக**



அகக்காட்சியில் பார்க்க முடியும். மனிதர்களிடம் இருதயம் ஓர் ஏற்புக் கருவியாகவும், ஆன்மீகக் கண் ஓர் ஒலி பரப்பும் நிலையமாகவும் செயல்படுகின்றன. நீங்கள் இழந்துவிட்ட உங்கள் அன்பிற்குரியர்களை காணமுடியாவிட்டாலும்கூட, உங்களுடைய உணர்ச்சிகளை இதயத்தில் அமைதியாக ஒருமுனைப்படுத்த உங்களால் முடியுமானால், தசையின் அடிமைத்தளத்திலிருந்து விடுபட்டதால் ஏற்பட்ட சுதந்திரத்தை அனுபவித்துக்கொண்டு இப்பொழுது சூட்சும வடிவத்திலிருக்கும் உங்கள் அன்பிற்குரியவர்களின் நம்பிக்கையூட்டும் இருப்பினை நீங்கள் உணர முடியும்.''



குருப்ரியா

மேலும் அவர் தொடர்கிறார்: “இவ்வுலகைவிட்டுப் பிரிந்துவிட்ட அனேக சூட்சுமவாசிகளை நான் காண்கிறேன். ஆனால் அவர்களால் என்னைக் காண முடியாது. நான் என்னை அவர்களுக்குத் தெரியும் படியாகச் செய்வதில்லை. ஆனால் நான் அவர்களைப் பார்க்க விரும்பினால், என்னைக் காணமுடியும்'' (மகிமை வாய்ந்த குருமார்கள் சூட்சும மற்றும் காரண உலகங்களிலும் இப்பூமியிலும் தமது சீடர்களைக் கண்காணிக்கின்றனர். இத்தகைய குருமார்கள் ஓர் உண்மையான சீடனின் அழைப்பிற்கு இணங்கி ஸ்தூல அல்லது சூட்சும உலகத்தில் தோற்றமளிக்க முடியும். இது ஒரு யோகியின் சுய சரிதம் அத்தியாயம் 34 ல் விவரிக்கப்பட்டுள்ளது)

“எனவே ஸ்தூல வடிவிலிருந்து நாம் பிரிந்து செல்லுகின்ற சமயமான இறப்பின்போது நாம் முழுமையாக விடுவிக்கப்படுவதில்லை. நமது ஆன்மாக்கள் தொடர்ந்து நுட்பமான சூட்சும மற்றும் காரண உடல்களில் அடைபட்டுள்ளன. ஸ்தூல உருவத்தை அணியும் போதுமட்டுமே மனிதன் இவ்வுலகில் கண்ணுக்குப் புலப்படுபவனாக ஆகிறான். அவனுடைய ஸ்தூல உடல், இறந்த பின்பு அவன் சூட்சும வடிவத்தில் ஓர் ‘ஆவியாக இப்புவியில் இருந்தபோது அவன் அடிப்படையாகப் பெற்றிருந்த அதே மனப்பான்மை மற்றும் குணாதிசயங்களுடன் அறிவுத்திறம் வாய்ந்தவனாக கண்ணுக்குப் புலப்படாதவனாக இருக்கிறான்; சூட்சுமப் பிரதேசங்களில் வசிப்பவர்கள், தத்தமது ஒளிமயமான தேகங்களில் ஒருவரையொருவர் நிச்சயமாகக் காணமுடியும். ஆனால் ஆன்மீகக் கண்மூலம் எவ்வாறு சூட்சும உலகைப் பார்ப்பதென்று நமக்கு தெரிந்தாலொழிய, சாதாரணமாக சூட்சுமவாசிகள் பூமியில் நம் கண்ணுக்குப் புலப்படமாட்டார்கள். ஆன்மாக்கள் சூட்சும உடலைக்களைந்து, காரண உலகில் (ஆன்மாக்கள் பூவுலக ஆசைகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளபோது, அவை பூமியில் இனிமேலும் பிறக்க வேண்டிய அவசியமில்லை. இத்தகைய ஆன்மாக்கள் பின்னர் சூட்சும உலகு மற்றும் ‘சுவர்க்க’ மாகிய காரண உலகிற்கும் இடையே இடம் பெயர்ந்து, அந்த நிலையிலிருந்தும்கூட ஆன்மீக விடுதலை பெறும்வரை சூட்சும உலகில் மீண்டும் பிறக்கின்றன.) மனோமயமான ரூபத்திற்குள் செல்லும்பொழுது அவை இல்லாமல் போய்விடவில்லை. ஆனால் அவை எண்ணங்கள் கண்ணுக்குப் புலப்படாமல் இருப்பதுபோல் உண்மையாகவே புலப்படாதவாறு ஆகிவிடுகின்றன.''

இப்பூவுலக தளத்தில் இருந்தபோது ஏற்பட்ட நிறைவேற்றப்படாத ஆசைகள், இறந்துவிட்ட ஓர் ஆன்மாவிற்கு இருக்குமானால், அது சூட்சும உலகில் அந்த ஆசைகளை உணர்வதும் தன்னை ஒரு ஸ்தூல உடலின் வழியாக வெளிப்படுத்த விரும்புவதும் தொடர்கிறது. இதனால் அதன் சூட்சும சரீரத்திலுள்ள அந்த ஆன்மாவானது, விந்துவும் கருவும் இணைந்த உயிரணுக்குள் மீண்டும் ஈர்க்கப்பட்டு மற்றும் ஒரு முறை ஸ்தூல உடலில் தோன்றுகிறது.

பிராணனில் உள்ள அறிவுத்திறம் ஸ்தூல உடலைப் படைக்கின்றது.

அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: “ஸ்தூல உடலில் ஊடுருவிப் பரந்துள்ள பிராணன், அறிவுத்திறம் வாய்ந்த உயிர்சக்தியாகும். (உயிர் மின்னணுக்கள்) மின் விளக்கை ஒளிபெறச்செய்யும் மின்சக்தி, மின் விளக்கை உண்டாக்குவதில்லை. ஆனால் மனித விந்துவும் கருவும் இணைந்த உயிர் அணுக்களிலுள்ள மின்சாரம் அல்லது உயிர் சக்தியானது கருவின் ஆரம்ப நிலையையும், அதைப் பின்தொடரும் முழுமனித உடலின் வளர்ச்சியையும் வழிநடத்துகின்றது. மேலே கூறப்பட்ட சூட்சும தேகத்தின் ஐந்து உயிர்சக்திகளாக வெளித்தோன்றுவதுடன், அது அறிவுத்திறம் வாய்ந்த அல்லது உணர்வுடன் செலுத்தப்படும் சக்தியாகும்.''







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

“உங்களுடைய தேகத்தின் எந்த ஒரு குறைபாட்டையும் உங்களுடையதென்று நிரந்தரமாக ஏற்றுக்கெள்வது அறிவுடைமையாகாது. இப்பிறவியில் நீங்கள் ஒரு கரத்தை இழந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். அந்த இழப்பின் எண்ணம் அந்தக் கரத்தின் உபயோகத்தை நீங்கள் ஒருபோதும் மீண்டும் பெற முடியாது என்று நினைக்குமளவிற்கு உங்களுடைய உணர்வு நிலையை ஆக்கிரமித்துவிடுகிறது. நீங்கள் மறுமுறை மீண்டும் பிறக்கும்போது இழந்துவிட்ட கரத்தின் அந்த உணர்வு நிலையையும் நீங்கள் உங்களுடன் கொண்டுவருகிறீர்கள்; மேலும் அந்த எதிர்மறை எண்ணம் போதிய அளவு வலுவாக இருந்தால், உங்களுடைய புதிய தேகத்தின் கரங்களை வளர்க்கின்ற அறிவுத்திறம் வாய்ந்த உயிர்சக்தியின் படைப்புச் செயல்பாட்டை அது தடை செய்யக்கூடும். ஆகையால் உங்களுடைய தேகத்தின் குறைபாடுகளுடன் உங்களை ஒருபோதும் அடையாளம் காணக்கூடாது. அவை உங்களுக்குச் சொந்தமானவை அல்ல, ஏனென்றால், நீங்கள் இறைவனின் தூய்மையான பூரணத்துவமான வடிவம் ஸ்ரீ ஆன்மா.”

“எனவே, பாருங்கள், இந்த ஸ்தூல உடலை எடுக்கும் முன்பு நீங்கள் ஓர் ஆவியாக இருந்திருக்கிறீர்கள். மேலும் இறந்த பின்பும் மீண்டும் ஓர் ஆவியாகிறீர்கள். நாம் உறங்கும்போதுகூட ஆவிகளாகவே உள்ளோம்; ஏனெனில் உறங்கும்போது நாம் ஸ்தூல தேகமாக நம்மை உணர்வதே இல்லை. உறங்கும்போது நீங்கள் ஆவியாக உள்ளதாலும், மரணத்திற்குப் பின்னர் மீண்டும் அப்படியான ஒன்றாக இருக்கப்போவதாலும், ஆவிகளைப்பற்றி ஏன் அச்சமடைய வேண்டும்? அதுவாகவேதான் நீங்கள் இருந்தீர்கள். அதுவாகவேதான் நீங்கள் இருக்கப் போகிறீர்கள். ஒரேயொரு வித்தியாசம் என்னவென்றால், நீங்கள் இறந்தபின் சூட்சும உலகில் நுழையும்போது, இப்பொழுது நீங்கள் பெற்றிருப்பது போன்று ஒரு ஸ்தூல உடலை நினைத்த மாத்திரத்திலேயே நீங்கள் சிருஷ்டிக்க முடியாது. தெய்வீக சிருஷ்டிகர்த்தாவான இறைவனுடன் ஒன்றுபட்டுள்ள மகிமை வாய்ந்த மகான்களால் மட்டுமே அப்படிச் செய்ய முடியும். ஆன்மீக ரீதியாக முன்னேற்றமடைந்துள்ள ஆன்மாக்கள், தமது சூட்சும உடலின் நுட்பமான அதிர்வுகளை காணக்கூடிய ஒரு தேகமாகச் சுருங்கச் செய்ய முடியும்.”

முற்பிறவிகளில் மறைந்திருக்கும் தீய பழக்கங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.

அன்பு குருதேவர் கூறுகிறரர்: “முற்பிறவிகளில் நீங்கள் எந்தெந்த நல்ல அல்லது தீயபழக்கங்களை உருவாக்கியிருந்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாததால், நீங்கள் இந்தப் பிறவியில் என்ன செய்கின்றீர்கள் என்பதைப்பற்றி கவனத்துடன் இருக்க வேண்டும். இல்லையெனில் மிகச்சிறிய தூண்டுதல்கள் பிறவிகளின் ஊடே உங்களைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் சில தீய பழக்கங்களுக்கு ஒரு புதிய பிடிப்பை ஏற்படுத்திவிடும். ஒருவர் ஒருமுறை மட்டுமே மது அருந்த நேர்ந்தால்கூட, முற்பிறவிகளின் பழைய பழக்கம் மீண்டும் விழிப்புற்று அவரை பற்றிக்கொள்கிறது; சீக்கிரமே அவர் குடிப்பழக்கம் கொண்டவராக மாறிவிடுகிறார் என்பது, இது எவ்வாறு நிகழக்கூடும் என விளக்குகிறது. எனவே ஒருவர் உபயோக மற்றது மட்டுமல்லாமல் தீங்கு விளைவிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த மது மற்றும் போதை மருந்துகள் மூலம் ஏற்படுத்தப்படுபவை போன்ற அத்தகைய பரிசோதனைகளில் இறங்காதீர்கள். பயனில்லாத ஆபத்தான பழக்கங்களுடன் சாகசம் புரியாதீர்கள்.”

“கர்மா’ என்ற சொல் செயல் என்றும் ‘செயல்களின் விளைவுகள் என்றும் கூட பொருள்படுகின்றது. அந்த வினைவுகளின் தன்மைதான், நீங்கள் நல்வினையை அறுவடை செய்தீர்களா அல்லது தீவினையை அறுவடை செய்தீர்களா என்பதை நிர்ணயிக்கும். எனது கர்மவினைதான், இந்தத் தீய சம்பவத்தை எனக்குக்கொண்டு வந்தது என்று நீங்கள் கூறும்பொழுது, நீங்கள்

நல்வினை மற்றும் தீவினைகளுக்குகிடையே வேறுபடுத்தவில்லை. நல்வினை நல்ல பலன்களைத் தரும். மேலும் நல்ல செயல்களை திரும்பத் திரும்பச் செய்வதற்கு வழிகோலும். தீவினை தீய பலன்களைத் தரும். மேலும் அது இன்னும் அதிக தீய செயல்களுக்கு வளமான மண்ணாகின்றது. உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தீய பழக்கம் அல்லது கர்மவினை ரீதியான விருப்பம் இருக்குமானால் அதே பழக்கம் கொண்டவர்களுடன் கலந்து பழகாதீர்கள். நீங்கள் பேராசை கொண்டவராக இருக்கும் நாட்டம் இருந்தால், பேராசை கொண்டவர்களுடைய நட்பை தவிர்த்து விடுங்கள். உங்களுக்கு மது அருந்துவதற்கான ஆசையிருந்தால் குடிப்பழக்கம் உள்ளவர்களிடமிருந்து விலகி இருங்கள். உங்களுடைய தீய பழக்கங்களுக்கு ஆதரவளிப்பவர்கள் உங்களுடைய நண்பர்கள் அல்ல. நீங்கள் உங்களுடைய ஆத்ம ஆனந்தத்தை அழிப்பதற்குக் காரணமாவீர்கள். தவறு செய்பவர்களின் தோழமையை தவிர்த்துவிடுங்கள். நல்லவர்களுடன் கலந்திருங்கள்.”

குருதேவர் கூறுவது என்னவென்றால், நாம் அனைவரும் இறைவனை அடையவேண்டியவர்கள். தீய பழக்கங்களையெல்லாம் கைவிட்டு நல்ல தோழமையுடைவர்களாகவும் நல்வினைகள் செய்யும் பழக்கம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும், பின்பு இறைவனை அடையவேண்டியதற்கான முயற்சி எடுக்க வேண்டும். இறைவனை கண்டடைந்த பின்னர் அவன் நமக்கு எல்லாவற்றையும் அறிவிப்பான். குருதேவர் தன்னுடைய போதனைகளில் குறிப்பிட்டுள்ளவற்றை எல்லாம் நாமும் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் நமக்கு கிடைக்கும். எல்லாம் தெளிவாக அவர் கூறியுள்ளார். அவற்றை நாம் ஏற்றுக்கொளள்த்தான் வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909





# செம்பை ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி சமஸ்தானத்தில் ஸ்ரீ பாலா அவதார நட்சத்திர வைபவம்

திருப்போரூர் அருகில் செம்பாக்கம் ஸ்ரீ பீடம் ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி சமஸ்தானம் ஸ்ரீமத் ஔஷத லலிதா மஹா திரிபுரசுந்தரி ஸ்ரீ சக்ர ராஜ சபை திருக்கோயிலில், 40வது ஆண்டு ஐப்பசி பூரம் மற்றும் ஸ்ரீபாலா அவதார திருநட்சத்திர வைபவம் நடைபெறவுள்ளது.

ஐப்பசி 4 (21.10.2022) வெள்ளிக்கிழமை மாலை ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரி ஸ்தபன பூஜை, மூலமந்திர ஹோமம், உற்சவ பாலா திரிபுர சுந்தரிக்கு மகா அபிஷேகம், சர்வ அலங்காரம், மகா ஆரத்தி உட்பிரகார உலா அன்னதானம் நடைபெறும்.

ஐப்பசி 5 (22.10.2022) சனிக்கிழமை காலை 7 மணிக்கு மூலவர் ஸ்ரீபாலா, தருணீ, ஸ்ரீ சக்கரத்திற்கு மகா அபிஷேகம், 9 மணிக்கு மூலவர் பாலா புஷ்ப அங்கி, மலர் கிரீடம், புஷ்ப சடை அலங்கார காட்சி நடைபெறும்.

மேலும் 75 வகையான இனிப்புகள், பட்சணங் கள் அன்னை பாலாவிற்கு நைவேத்தியமாக படைக் கப்படும், சகஸ்ரநாம அர்ச்சனை 12 மணிக்கு சோடஷ மகா தீபாராதனை, அன்னதானம் ஸ்ரீபாலாவின் இனிப்பு பிரசாதங்கள் வழங்குதல் நடைபெறும். மேலும் விபரங்களுக்கு 9789921151





அற்புதமான தகவல்களுடன்,

ஆன்மிகமலர்.காம் வழங்கும்

2023-ம் ஆண்டு மாத காலண்டர்

அற்புத தகவல்களுடன் தயராகிறது

குறைந்த விலையில் 100, 200, 500, 1000

எண்ணிக்கையில் தேவைப்படுபவர்கள்

தொடர்பு கொள்ளவும்

**மேலும் தகவல்களுக்கு: 9994162182**

# இயற்கை மருத்துவம்

- தும்பை இலைச்சாறு எல்லா விஷக்கடிகளுக்கும் சிறந்தது.
- வெந்தயம், குன்றிமணி பொடி செய்து தேங்காய் எண்ணெயில் ஊற வைத்து ஒரு வாரத்திற்குப்பின் தினமும் தேய்த்து வந்தால் முடி உதிர்வது நிற்கும். வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் வேக வைத்து ஒரு நாள் கழித்து மறுநாள் வேக வைத்த நீரை கொண்டு தலை முழுகி வந்தாலும் முடி உதிர்வு நிற்கும். பேன் நீங்கும்.
- நல்ல சுண்ணாம்பில் விளக்கெண்ணெய் கலந்து குழப்பி பித்த வெடிப்பு கண்ட இடத்தில் தடவி வந்தால் விரைவில் குணமாகும்.
- தினமும் 5 ஆவாரம்பூ அல்லது 1 கோவை பழம் சாப்பிட சர்க்கரை நோய் குணமாகும்.
- வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி சிறிது பனங்கற்கண்டு சேர்த்து வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர நரம்புத்தளர்ச்சி குணமாகும்.
- மூளை பலம் பெற எலுமிச்சை பழம் மிகவும் நல்லது.
- விளாம்பூக்களை சுத்தம்செய்து நீரில் கொதிக்க விட்டு வடிகட்டி உள்ளுக்கு சாப் பிட்டு வர எலி விஷம் நீங்கும்.
- தீப்புண்ணால் தோலின் நிறம் மாறி வெள்ளை யாக இருந்தால், வேப்பம்பட்டை கஷாயம் செய்து பாட்டிலில் வைத்து குலுக்கி வரும் நுரையை வடு மீது தடவி வர தோல் பழைய நிறம் பெறும்.
- காலில் முள் குத்திய இடத்தில் முள்ளை எடுத்த பின் வெற்றிலையில் நல்லெண்ணெய் தடவி அணலில் வாட்டி சூட்டோடு வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்தால் வலி பறந்து விடும்.
- நாவல் பழம் வாயுத்தொல்லை, வயிற்றுப் புண்களை ஆற்ற வல்லது.
- கருந்துளசி இலைச்சாறு பிழிந்து இரண்டு வேளை 3 நாட்கள் சாப்பிட்டு வர கபக்கட்டு வெளியேறும்.
- சௌசௌ சாப்பிடுவதால் எலும்புகளுக்கு உறுதியும், பற்களுக்கு பலமும், ஜீரண சக்தியும் கிடைக்கறது.
- வாழைப்பூ வாரம் ஒருமுறை சாப்பிட்டால் வயிற்றுப்புண் குணமாகும்.
- நாயுருவி வேரை அரைத்து கோலி குண்டு அளவு உருட்டி 15 நாள் சாப்பிட்டு வர வெறிநாய் கடி குணமாகும்.



- அகத்தி கீரையை நிழலில் உலர்த்தி பொடி செய்து காலை, மாலை 4 ஸ்பூன் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் குணமாகும்.
- கருணைக்கிழங்கு வாரம் இருமுறை உண வில் சேர்த்தால் மூலம் கட்டுப்படும்.
- கோதுமை கஞ்சி மாதவிடாய் காலங்களில் சாப்பிட்டால் அக்காலங்களில் ஏற்படும் உடல் சோர்வை நீக்கி பலம் பெறும்.
- இரவு படுக்குமுன் பேரிச்சம்பழம், பால் சாப்பிட்டு வர உடல் புஷ்டியாகும்.
- ஞாபக சக்தி பெருக பாதாம்பருப்பு, வெண் டைக்காய், உருளைக்கிழங்கு, தக்காளி சிறந்தவை.
- வெள்ளை வெங்காயத்தை துணியில் கட்டி சாறு எடுத்து, அந்த சாற்றை இரண்டு காதுகளிலும் ஊற்றினால் காக்காய் வலிப்பு குணமாகும்.
- மருதாணி பூவை தேங்காய் எண்ணையில் ஊற வைத்து வெயிலில் காய வைத்து தொடர்ந்து தேய்த்து வர வழுக்கைத்தலையில் முடி வளரும்.
- மாமரத்தின் தளிர் இலையை உலர்த்தி பொடியாக்கி வைத்துக்கொண்டு ஒரு ஸ்பூன் வென்னீரில் கொதிக்க வைத்து தினமும் காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர நீரிழவு நோய் குணமாகும்.
- இழந்த இயற்கை நிறத்தை பெற அத்திப்பழம் சிறந்தது. அத்திக்காய் உதட்டில் வெடிப்பு, உதட்டுப்புண்ணுக்கு சிறந்தது.
- இரவில் தலையணையில் செம்பருத்தி இலைகளை வைத்து படுத்து வந்தால் தலைப்பேன்கள் ஒழியும்.
- திப்பிலி, சுக்கு, எள் மூன்றையும் சம அளவு எடுத்து இடித்து தூள் செய்து ஒரு நாளைக்கு மூன்று வேளை தேனுடன் சாப்பிட்டு வர மூல நோய் குணமாகும். மூல நோய்க்கு துத்திக்காய் மிகவும் நல்லது.
- இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் மாம்பழம் சாப்பிடுவது நல்லது.
- தினமும் காலையில் சாப்பிட்டவுடன் வென்னீரில் தேன் கலந்து குடித்து வர ஞாபக சக்தி அதிகமாகும்.
- கோதுமையை பொன்னிறமாக வறுத்து அரைத்து சலித்து தேன் கலந்து சாப்பிட மூட்டு வலி குணமாகும்.
- திருநீற்றுப்பச்சை இலைச்சாற்றை மூக்கில் நுகர தும்மல் வந்து மூளைக்காய்ச்சல் கிருமி வெளியேறும்.
- வெள்ளைப்பூண்டை கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வர இடுப்பு வலி குணமாகும்.
- பன நுங்கை மேல் தோல் உரிக்காமல் சாப்பிட்டு வர சீதபேதி குணமாகும்.
- காரட், பீட்ரூட் சாப்பிடுவதால் மஞ்சள் காமா லையை தவிர்க்கலாம்.
- மிளகுடன் பொரிகடலை சேர்த்து பொடி யாக்கி சாப்பிட்டால் வரட்டு இருமல் குண மாகும்.


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

இணையதளத்திற்கும்,
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்திற்கும்
விருப்ப சந்தா
செலுத்தி,
நமது இதழின் வளர்ச்சிக்கு
ஊக்கமளியுங்கள்

Scan to Pay
with any
BHIM UPI App



எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,**
**கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்**
**வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# பெருந்தன்மை ஆண், பெண் என்ற இருவரிடத்திலும் வேண்டும்

தெருக்களை மத்தியில் சந்திக்கும் குறுக்குத் தெருக்கள் பெருஞ்சாலைகளை இடையில் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு விரைவில் இட்டுச் செல்லுகின்ற பாதைகள் நாட்டில் உண்டு. இது மிகவும் சுலபம் என்றால் நீ சிந்தனை செய்யும் பொழுதும் விவாதம் செய்யும் பொழுதும் வழிமறிக்கும் குறுக்குச் சிந்தனைகளைச் செய்யாதே! அப்படிச் செய்தால் அது ஒரு சிலந்தி வலை போன்ற துன்பத்தை ஏற்படுத்திவிடும். உண்மையை அடைய எப்பொழுதும் நேர்மையான விவாதமே சரி.

❖ ❖ ❖

மனிதனின் எட்டிப்பிடிக்கும் குறிக்கோள் அனைவருக்கும் பாதையைக் காட்டிவிடும்.

❖ ❖ ❖

எவர் ஒருவரும் அனைத்தையும் அறிந்தவர் அல்ல. உலகில் அனைத்துமே எவருக்கும் அறிவாக அமைவதில்லை. இது எவருக்கும் புரிந்துவிடுகிறது. நீ அறிந்திருக்கும் ஒரு சிறிது அது அடுத்தவருக்கு ஒரு சிறிது ஏற்கெனவே பயன்பட்டதாக இருக்கிறது. அறிவதும் அறியப்படுகின்றவனும் எப்பொழுதுமே அறிந்து கொள்ளக் கூடிய கல்விமான்களாக ஆகின்றனர்.

❖ ❖ ❖

அனைவரும் அறிந்து கொள்ளும்படியாய் இரு, என்ன அறிந்து கொள்ள வேண்டும் என்று கேட்காதே. ஒன்றை அறிவது என்பது உன்னுடைய இயற்கைத் தன்மை. இதை நீ விட்டுவிட்டால் நீ துன்பப்பட்ட ஆரம்பிப்பதோடு அல்லாமல் சிந்தனைக்கும் துன்பப்படுவாய்.



❖ ❖ ❖

பஞ்சபூதங்களில் தண்ணீர் என்னும் பூதம் மழையை நிலத்திற்கு கொணர்ந்து தனது பெருந்தன்மையைக் காட்டுகிறது. இதனால் பூமியில் பல விளைவுகள் திடீரென்று தோன்றுகின்றன. அதுபோன்ற பெருந்தன்மை ஒரு ஆண், பெண் என்ற இருவரிடத்திலும் வேண்டும். அத்தன்மையைப் பெறுகின்ற வரை வாய்மூடி மௌனமாய் இரு.

❖ ❖ ❖

ஆண்டவனின் கருணையே ஐம்பெரும்பூதங்கள் ஆகும். இவற்றில் ஒன்றின் பெயர் ஆகாயம், தண்ணீர், நெருப்பு, காற்று, மண் ஆகும். இத்தகைய கருணையுள்ள நிலத்தில் நீயும் கருணையாய் இருக்க முயற்சி செய்.

❖ ❖ ❖

கருணையற்ற ஒரு ஆண் ஒரு பெண் இவர்களின் வாழ்க்கை உலகில் ஒரு வெட்டியான வாழ்க்கை ஆகிவிடக் கூடாது. அப்படி இருந்தால் அவர்கள் பேய் பூதங்களுக்கும் சுவையானவர்களே.

❖ ❖ ❖

தண்ணீர் ஆண்டவனின் ஒரு அற்புதமான முடிவு. இதன் பருவகாலங்கள் பூமியின் வண்ணக்கோலங்கள்.

❖ ❖ ❖

மழையும் அதனிடை இடையே

பேரிடிகளும் தேவதைகளின் சிரிப்புகளே.

❖ ❖ ❖

அனைத்தின் உண்மை விளக்கங்கள் நம் ஒருவருக்கும் தெரியவே தெரியாது. நாம் முறைப்படுத்தப்பட்ட விஞ் ஞானக் கல்வியின் உண்மையை முறைப்பட அறிவோம் என்றாலும் நமது சொந்த இதயடித்துப்பின் உண்மையை நாம் அறிவதே இல்லை. அறியாத இந்த ஒன்றே கடவுளாகும்.

❖ ❖ ❖

கூர்மையான காலணி என்ற பாதரக்ஷைகள் பாதங்களுக்கு இரக்ஷையாய் இருக்கின்றன. இதுபோல உலகிற்கு கடவுள் ஒரு பாதுகாப்பு முனை.

❖ ❖ ❖

கிழிந்த கந்தல் ஆடையைப் போன்றது கோழைத்தனம். அப்படி இருந்தும் சிலர் இத்தன்மையைக் கொண் டிருக்கிறார்கள். ஏன் என்று எனக்குத் தெரியவே இல்லை.

ஆன்மிகமலர்

❖ ❖ ❖

தினமும் அழுக்கடைந்த ஆடைகளை அழுக்கு நீங்க துவைப்பது ஒரு நல்ல பழக்கமே. இதுபோல சுத்தமான இதயம் எப்பொழுதுமே நல்லது.

❖ ❖ ❖

மௌனமான பிரார்த்தனை என்பது கிடையவே கிடையாது. மனம் உவந்து உருக்கத்துடன் பிரார்த்திப்பது எப்பொழுதும் அமைதியையும் சாந்தத்தையும் தரும். உனது பழக்கமான மனச்சலனங்கள் அனைத்தும் இதன் மூலம் அற்றுப்போகின்றன.

❖ ❖ ❖

'உலகமக்களே வாருங்கள்'. இப்படி அழைத்தும் எவருமே வருவதில்லை. இதனால் கடவுளின் குரல் உனது ஆழ்ந்த உள்ளத்தின் உடன் தூண்டுதலாகத் தெரிவதில்லை. அச்சமயத்தின் ஆராய்ச்சி அதுவே.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்

**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்
மெயில் புக்



**இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க**










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# இடையனாக வந்து, இடையில் விட்டுச் சென்ற இடைச்சுரநாதர்



www.aanmeegamalar.com

செங்கல்பட்டில் இருந்து திருப்போரூர்போகும் சாலை மார்க்கத்தில், செங்கல்பட்டில் இருந்து கிழக்கே சுமார் 9 கி.மி. தொலைவில் உள்ளது அருள்மிகு கோவர்த்தனாம்பிகை அம்மன்உடனுறை ஞானபுரீஸ்வரர் திருக்கோயில். திருவடிசூலம் பேருந்து நிறுத்தத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் ஆலயம் உள்ளது.

இத்தலத்தின் சிறப்பு மூலவர் லிங்கத் திருமேனி. இந்த சுயம்பு லிங்கம் ஒரு மரகதலிங்கம். சதுரபீட ஆவுடையார்.

அம்பாள், பசு வடிவில் வந்து பால் சொரிந்து இறைவனை வழிபட்ட தலம். ஆதலால் இறைவி கோவர்த்தனாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள்.

இடையனாக வந்து, இடையிலேயே விட்டுவிட்டுச் சென்றதால் இறைவனை இடைச்சுரநாதர் என்று அழைத்து பதிகம் பாடினார் சம்பந்தர். சிவன் மறைந்த குளக்கரை "காட்சிகுளம்" என்ற பெயரில் தற்போதும் இருக்கிறது.

தேவாரப்பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இது 27வது தலம்.

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 260 வது தேவாரத்தலம் ஆகும்.

இறைவர்திருப்பெயர்:ஞானபுரீஸ்வரர்,இடைச்சுரநாதர். இறைவியார் திருப்பெயர்: கோவர்த்தனாம்பிகை, இமயமடக்கொடி அம்மை.

தலவரலாறு

திருஇடைச்சுரம் (தற்போது திருவடிசூலம் என்று வழங்குகிறது). திருஞானசம்பந்தர் தனது சிவஸ்தல யாத்திரையின் போது இவ்வழியே வந்து கொண்டிருந்தார். நீண்ட தூரம் நடந்து வந்ததாலும், வெயில் ஏறியதாலும் அவர் மிகவும் களைப்படைந்தார். அதோடு பசியும் அவரை வாட்ட ஒரு மரத்தடியில் அமர்ந்தார். அப்போது ஒரு இடையன் அங்கு வந்தான். பசியோடு உள்ள சம்பந்தரைப் பார்த்த அவன் தன்னிடமிருந்த தயிரை பருகக் கொடுத்தான். தயிரைப் பருகி களைப்பு நீங்கிய சம்பந்தரை பார்த்து இடையன் அவர் யார் என்று வினவினான். தனது சிவஸ்தல யாத்திரைப் பற்றிக் கூறிய சம்பந்தரிடம், இடையன் அருகிலுள்ள வனத்தில் ஒரு சிவன் இருப்பதைப் பற்றிக் கூறினான். இடையன் மூலமாக பசியாறிய






சம்பந்தர் அவனது அழைப்பைத் தட்ட முடியாமல் அவனைப் பின் தொடர்ந்து சென்றார். வழியில் ஒரு குளக்கரையில் நின்ற இடையன் சம்பந்தரைப் பார்த்து புன்னகைத்துவிட்டு மறைந்து விட்டான்.

திகைப்படைந்த சம்பந்தர் சிவபெருமானை வேண்ட,சிவன் அவருக்கு காட்சியளித்து தானே இடையன் வடிவில் வந்து அருள் புரிந்ததைக் கூறினார். இடையனாக வந்து, இடையிலேயே விட்டுவிட்டுச் சென்றதால் இறைவனை இடைச் சுரநாதர் என்று அழைத்து பதிகம் பாடினார் சம்பந்தர். சிவன் மறைந்த குளக்கரை "காட்சி குளம்" என்ற பெயரில் தற்போதும் இருக்கிறது.

திருஞானசம்பந்தர் இயற்றியுள்ள இத்தலத் திற்கான இப்பதிகம் முதலாம் திருமுறை யில் இடம் பெற்றுள்ளது. இத்தல இறைவனின் திரு மேனி வண்ணம் கண்டு அதிசயித்து தனது பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்


சிவத்திரு.குமரேசன்

இடைச்சுர மேவிய இவர்வண மென்னே என்று பாடியுள்ளார்.

தொண்டை நாட்டுத் தலங்கள் வரிசையில் 27வது தலமான திருஇடைச்சுரம் (திருவடிசூலம்) பல குன்றுகளுக்கு நடுவில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் திருவடிசூலம் கிராமத் தில் அமைந்துள்ளது.

கோவிலுக்கு இராஜகோபுரம் இல்லை. தெற்கு நோக்கிய ஒரு நுழைவாயில் மட்டுமே உள்ளது. கோவிலுக்கு வெளியே இடதுபுறம் வரசித்தி விநாயகர் சந்நிதி உள்ளது. நுழைவாயில் வழியாக உள்ளே சென்றால் விசாலமான தெற்கு வெளிப் பிரகாரத்தில் நேரே வலம்புரி விநாயகர் சந்நிதியைக் காணலாம். வெளிப் பிரகாரம் வலம் வரும் போது கிழக்குப் பிரகாரத்தில் பலிபீடமும், நந்தியும் உள்ளன. இப்பிரகாரத்தில் பிரம்மாண்டேஸ்வரர் சந்நிதியும் உள்ளது. அருகில் வேப்பம், அரசு, வில்வம் ஆகிய மூன்று மரங்களும் இணைந்து வளர்ந்திருப்பதைக் காணலாம். மேலும் இந்த கிழக்குப் பிரகாரத்தில் தெற்கு நோக்கிய சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையுடன் உள்ள சந்நிதியும் உள்ளது. பிரகார வலம் முடிந்து மீண்டும் தெற்குப் பிரகாரம் வந்தால் தல விருட்சம் வில்வமரம் உள்ளது. இந்த வில்வ மரத்திற்கு அருகில் ஒரு பாம்புப் புற்று உள்ளது. இது விநாயகர் வடிவில் காட்சி தருகிறது.

தெற்குப் பிரகாரத்திலுள்ள மற்றொரு நுழைவாயில் வழியே உள்ளே சென்றால் அநேக தூண்களுடன் ஒரு பெரிய மண்டபம் உள்ளது. மண்டபத்தை அடுத்து நேரே தெற்கு நோக்கிய இறைவி கோவர்த்தனாம்பிகை சந்நிதியைக் காணலாம். சந்நிதிக்குள் நுழைந்தால் இடதுபுறம் கிழக்கு நோக்கிய இறைவன் ஞானபுரீஸ்வரர் சந்நிதி உள்ளது. ஒரே இடத்தில் நின்றபடி இறைவன், இறைவி இருவரையும் தரிசிக்கலாம். மூலவர் சந்நிதிக்கு இருபுறமும் விநாயகரும் முருகப்பெருமானும் காட்சியளிக்கின்றனர்.

கருவறை அகழி அமைப்புடன் காணப்படுகிறது. வலமாகச் சுற்றி வந்தால் நால்வர் பிரதிஷ்டை



உள்ளது. விநாயகர், சந்நிதியும், வள்ளி தெய்வயானை உடனாகிய சுப்பிரமணியர் சந்நிதியும் அடுத்து உள்ளன. அடுத்த தரிசனம் பைரவர். இத்தலத்தின் சிறப்பு மூலவர் லிங்கத் திருமேனி. இந்த சுயம்பு லிங்கம் ஒரு மரகதலிங்கம். சதுரபீட ஆவுடையார். சிவலிங்கத் திருமேனியில் தீபாராதனை செய்யும்போது அவ்வொளி பிரகாசமாக லிங்க பாணத்தில் தெரிகின்றது. கோஷ்ட மூர்த்தங்களாக தட்சினாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

– சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்,
பேராசிரியர் S.I.V.E.T கல்லூரி, சென்னை,
போன்: 919003296221 easanaithedi.in

# சாய்பாபா போதனைகள்

- பெற்றோரை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். அப்போதுதான் எதிர் காலத்தில் நீங்கள் தாய் தந்தையர் ஆகும் போது, உங்களை உங்கள் பிள்ளைகள் மதிப்புடன் நடத்துவார்கள்.
- மண்ணில் பிறக்கும் உயிர்களில் மனிதப்பிறவி தனிச்சிறப்புடையது. கடவுளின் கரங்களில் இருந்து இவ் வரிய கொடையாகிய மனிதப்பிறவி என்னும் வெகுமதியை பெற்ற நாம், அதன் அருமையை உணராமல் வாழ்ந்தால், பெரும் பாவியாவோம்.



- மனதை அலைபாய விடாமல் தடுப் பது யோகம். அவ்வாறில்லாமல் அலைபாய விட்டால் உண்டாகும் ரோகம். இன்றைய மனிதன் புல னடக்கம் இல்லாததால் உலக சுகங் களில் மூழ்கி தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.
- சிலர் காலை மடக்கி உட்காருதல், ஒற்றைக் காலில் நிற்றல் இதைத் தான் யோகாசனம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான யோகம் என்பது உயர்ந்த அன்புணர்வோடு இறைவனோடு நம்மை இணைத்துக் கொள்வதாகும்.
- அன்பால் இதயத்தை நிறைத்திருக்கும் மனிதனையே இறைவன் விரும்புகிறார். உண்மையோடும், பக்தியோடும் இருக்கும் மனிதர்களை தேடிவந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருள்வார்.






பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

52

நமது மனம், ஞானேந்திரியங்கள் காரண சரீரத்தில் ஒடுங்கி விடுவதை ஆழ்ந்த உறக்கம் என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் காரண சரீரத்தில் இருந்து விடுபடும்போது சூக்ம சரீரமாக மாறி விடுகிறோம். நாம் சூக்ம சரீரத்திலிருந்து விடுபடும்போது ஸ்தூல சரீரத்திற்கு வந்து விடுகிறோம். அதாவது நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து கனவு நிலைக்கு மாறி, கனவுநிலையில் இருந்து விடுபட்டு விழித்துக்கொண்டு ஸ்தூல சரீரத்துக்கு வந்து விடுகிறோம்.

ஸ்தூல சரீரத்தில் நமது மனம் அபிமானம் வைத்து இருந்தால் மட்டும் விழிப்புநிலையில் இருக்க முடியும். சூக்ம சரீரத்தில் அபிமானம் வைத்து இருந்தால் மட்டும் கனவுநிலையில் மனம் இருக்க முடியும். காரண சரீரத்தில் மனம் அபிமானம் இருக்கும்போது மட்டும் ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்க முடியும் என்று மூன்று அவஸ்தைகளைப் பற்றி சாஸ்திரம் விளக்கிக் கூறுகிறது. மனிதன் தன்னை மறந்த நிலையில் மிகவும் ஆனந்தமாக மூன்று சரீரங்களையும், மூன்று அவஸ்தைகளையும் மறந்தநிலையில் தூங்குவதைத்தான் ஆழ்ந்த உறக்கம் என்று சாஸ்திரம் கூறுகிறது;

நமது மனம் மூன்று நிலைகளில் செயல்படுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. நமது ஞானேந்திரியங்கள் மூலம் வெளியில் உள்ள நிகழ்வுகளை விசயங்களை நமது மனம் கிரகிக்கிறது. நமது மனம் கிரகிப்பதன் மூலம் ஸ்தூல சரீரம் பலவிதமான அனுபவங்களைப் பெறுகிறது. மேலும் வேறு உலகத்திற்கும் நமது மனம் அவற்றை எடுத்துச் செல்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஸ்தூல, சூக்ம, காரண சரீரங்களுக்கும், விழிப்புநிலை, கனவுநிலை மற்றும் ஆழ்ந்த உறக்கம் மூன்று அவஸ்தைகளுக்கும் வேறுபட்டு அப்பாற்பட்டது ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. அவஸ்தை என்றால் அனுபவம் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதன் மூன்று அவஸ்தைகளையும் ஒரே நேரத்தில் அனுபவவிப்பதற்கு முடியாது. அதாவது மனிதன் ஒரே நேரத்தில் விழிப்புநிலை, கனவுநிலை, ஆழ்ந்த உறக்கம் போன்ற மூன்று அவஸ்தைகளையும் ஒரே நேரத்தில் அனுபவவிப்பதற்கு முடியாது.

அதாவது ஒரு மனிதன் விழிப்புநிலையில் இருந்து கொண்டிருக்கும்போது அவன் கனவுநிலை என்ற அவஸ்தைக்குச் செல்வதற்கு முடியாது. மனிதன் விழிப்புநிலையில் இருந்து கொண்டிருக்கும்போது கனவுநிலை என்ற அவஸ்தைக்கு சென்று அதனை அனுபவவிப்பதற்கு முடியாது. மனிதன் கனவு நிலையில் இருந்து கொண்டிருக்கும்போது அவன் விழிப்புநிலை மற்றும் ஆழ்ந்த உறக்கத்திற்குச் செல்வதற்கு முடியாது. கனவுகளற்ற உறக்கமே ஆழ்ந்த உறக்கம் ஆகும்.

அதேபோன்று மனிதன் கனவுநிலையில் இருக்கும்போது விழிப்புநிலை என்ற அவஸ்தைக்கும் ஆழ்ந்த உறக்கநிலைக்கும்



சென்று அவற்றை அனுபவவிப்பதற்கு முடியாது. மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மீண்டும் மீண்டும் அவனிடம் மூன்று அவஸ்தைகளும் வந்து போய்க்கொண்டுதான் இருக்கும். அதாவது அவன் இரவில் உறங்கும்போது கனவுநிலை என்ற அவஸ்தைக்குச் செல்வான். அவன் சில நேரங்களில் கனவுநிலையில் இருந்து ஆழ்ந்த உறக்கம் என்ற அவஸ்தைக்குச் செல்வான். அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழிப்புநிலை என்ற அவஸ்தைக்கு மீண்டும் வந்து விடுவான்.

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்குள் மூன்று அவஸ்தைகளும் மாறி மாறி வந்து செல்கிறது. நாம் விழிப்பு நிலையில், கனவுநிலையில் மற்றும் ஆழ்ந்த உறக்கநிலையில் இருப்போம். இந்த மூன்று அவஸ்தைகளும் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மீண்டும் மீண்டும் வந்து செல்லும் என்று சாஸ்திரம் கூறுகிறது. எனக்கு விழிப்புநிலை வந்து போகிறது. எனது மனம் கனவுநிலை வந்து வந்து போகிறது. சில நேரங்களில் மனம் ஆழ்ந்த உறக்கநிலைக்குச் சென்று விடுகிறது. இவற்றையெல்லாம் யார் சொல்கிறார்கள் இதனை நாம் எப்படி அறிந்து கொள்வது என்பதைப்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒரு தங்கும் விடுதியில் ஐந்தாம் எண்ணுள்ள அறையில் ஒருவர் வந்து தங்கியிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். ஐந்தாம் எண்ணுள்ள அந்த அறைக்கு பத்து மணிக்கு ஒரு நபர் ஏதோவொரு பணி நிமித்தம் வந்து விட்டு செல்கிறார். அந்த அறைக்கு மற்றொருவர் இரண்டு மணிக்கு ஏதோவொரு பணிக்கு வந்து விட்டு செல்கிறார்.

இரண்டு நபர்களும் ஐந்தாம் எண்ணுள்ள அறைக்கு வந்து சென்றது காலம் நேரம் பற்றி அவரவருக்கு மட்டும் தெரியும். அந்த ஐந்தாம் எண்ணுள்ள அறைக்கு இரண்டு நபர்களும் அறைக்கு வந்து சென்றது பற்றி யாருக்குத் தெரியும் என்றால் அந்த அறையிலே தங்கி இருந்தவருக்கு மட்டும்தான் தெரியும். எந்த ஒரு நபர் மாறாமல் ஒரே இடத்தில் இருந்து கொண்டு இருக்கிறார்களோ அவர்களால் மட்டும்தான் மற்றவர்கள் வந்து சென்றது குறித்து சொல்ல முடியும். அவருக்கு யார் யார் எத்தனை மணிக்கு தன் அறைக்கு வந்து சென்றார்கள் என்பது பற்றி தெரியும். அவரால் மட்டும்தான் இரண்டு நபர்களும் அறைக்கு வந்து சென்றது பற்றி கூறுவதற்கு முடியும்.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மிக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

உலகு நியதி என்பது எந்தப் பொருள் அசைவற்ற நிலையில் இருக்கிறதோ அதன் ஆதாரத்தில்தான் உலகில் எந்தவொரு மாற்றமும் நிகழ்வதற்கு முடியும். எடுத்துக்காட்டாக ஒரு ரயில் வேகமாக ஸ்டேஷனை நோக்கி வருகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த ரயில் அசைவற்று நிலையாக இருக்கும் தண்டவாளத்தின் மீது வருவதால் ஒவ்வொரு ஸ்டேஷனையும் கடந்து வருகிறது. தண்டவாளம் அசையாமல் நிலையாக ஓரிடத்தில் இருக்கிறது. அந்த தண்டவாளம் ரயிலுடன் சேர்ந்து நகருவதில்லை. அதேபோன்று எந்த ஒரு பொருள் அசைவற்று நிலையாக இருக்குமோ அதன் ஆதாரத்தில்தான் உலகில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும்.

நான் விழிப்புநிலையில் இருக்கிறேன். நான் இரவில் உறக்கத்தில் கனவு நிலையில் இருந்தேன். நான் இன்று கவலையில்லாமல் ஆழ்ந்து உறங்கினேன். இந்த 'நான்' என்பது நமது மனதைத்தான் குறிக்கிறது. நான் விழித்துக் கொண்டிருந்தேன். நான் உறக்கத்தில் கனவு கண்டு கொண்டிருந்தேன். நான் கவலையில்லாமல் ஆனந்தமாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தேன். மூன்று அவஸ்தைகளில் இருந்தவன் 'நான்' என்ற ஒரே மனம்தான். இந்த 'நான் என்ற எண்ணம்' அவன் ஸ்தூல உடலில் விழிப்புநிலை என்ற அவஸ்தையில் இருக்கும்போதுதான் மூன்று அவஸ்தைகளில் மனம் இருந்ததைப்பற்றி பிறரிடம் சொல்லவோ தனக்குள் நினைக்கவோ அறிந்து கொள்ளவோ முடியும்.

ஒரு மனிதன் விழித்துக்கொண்டு இருக்கிறான் என்றால் அவன் மனம் விழிப்பு நிலையில் இருக்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டும். அதே மனிதன் உறக்கத்தில் கனவுநிலையில் இருக்கிறான் என்றால் அவன் மனம் உறக்கத்தில் கனவு உலகத்தை கண்டு களித்துக் கொண்டு இருக்கிறது. மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறான் என்றால் அவன் மனம் ஆழ்ந்த உறக்கத்தில் ஆனந்தமாக இருக்கிறது என்று பொருள் கொள்ள வேண்டும்.

மனிதனுடைய ஆழ்ந்த உறக்கம் என்பது அவன் மனம் காரண சரீரத்தில் ஒடுங்கி



**எழுத்தாளர்**
**பூ.சுப்ரமணியன்**

விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. அவ்வாறு காரண சரீரத்தில் ஒடுங்கிய அவன் மனம் விழித்துக் கொள்ளும்போதுதான் அவன் கனவு கண்டதையும் ஆழ்ந்த உறக்கத்தில் ஆனந்தமாக இருந்தது பற்றியும் கூறவோ நினைக்கவோ அவன் பெற்ற அனுபவங்களைப்பற்றி மற்றவர்களிடம் கூறுவதற்கு முடியும்.

மூன்று அவஸ்தைகளிலும் மாறாமல் எவனொருவன் சாட்சியாக இருந்து அதாவது விழிப்புநிலை, கனவு நிலை, ஆழ்ந்த உறக்கத்தையும் பார்த்துக் கொண்டு இருக்கிறவன் எவனோ அவன் தான் அழிவில்லாத ஆத்மா. மூன்று அவஸ் தைகளில் எவ்வித மாற்றமும் கொள்ளாமல் மூன்று அவஸ்தைகளிலும் சாட்சியாக மட்டும் இருந்து பார்த்துக்கொண்டு அழிவற்ற நிலையில் இருப்பவன் எவனோ அவன்தான் ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனிதன் ஸ்தூல சரீரத்தில் அபிமானம் வைத்திருக்கும்போது விழிப்புநிலையில் இருந்தபோது 'நான்' என்பது வந்து விடுகிறது. சூக்ம சரீரத்தில் மனம் அபிமானம் வைக்கும்போது கனவு நிலைக்கு இந்த 'நான்' என்பது வந்து விடுகிறது. அதேபோல் நாம் காரண சரீரத்தில் அபிமானம் வைக்கும்போது மனம் சூக்மத்திலிருந்து காரண சரீரத்திற்கு இந்த 'நான்' என்பது மாறி விடுகிறது.

மனிதன் மனதில் துன்பத்தையோ இன்பத்தையோ ஏதோ ஒன்றைப் பற்றி இடைவிடாது நினைத்துக்கொண்டு மனம் குழப்பத்தில் இருக்கும்போது அவனுக்கு ஆழ்ந்த உறக்கம் என்பது வருவதில்லை. அதாவது அவன் மனம் அப்போது காரண சரீரத்தில் ஒடுங்குவதில்லை. மனிதனுடைய மனம் காரண சரீரத்தில் ஒடுங்கினால் மட்டும் அவன் ஆழ்ந்த உறக்கத்தில் ஆனந்தமாக இருக்கலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. கனவுகளற்ற ஆழ்ந்த உறக்கத்தில் நாம் விரும்பும் தேடும் அமைதி கிடைக்கும்..

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த விரும்பும் வாசகர்கள்...










விருப்ப
**சந்தா**

**UPI & வங்கி எண்**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**